SLECIC

# ஆண்டறிக்கை - 2014

# ஆண்டறிக்கை 2014
# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டும் நோக்கங்கள் மேற்படி சட்டத்துக்கு ஏற்ப வகுக்கப்பட்டுள்ளன.

# எமது நோக்கம்

சர்வதேச வர்த்தகத்தின் முன்னேற்றம் மற்றும்
அபிவிருத்திக்கு தூண்டுகையாக இருத்தல்.

# எமது குறிக்கோள்

ஏற்றுமதியாளர்கள், வங்கிகள் மற்றும்
ஏனைய நிதி நிறுவனங்கள் மற்றும்
இறக்குமதியாளர்களுக்கு தகவல், ஒத்துழைப்பு
மற்றும் பாதுகாப்பு வழங்கும் செயற்பாடுகளில்
நாம் ஈடுபடுகிறோம். உயர்தரமான
தனிப்பட்ட சேவைகளின் மூலம் நாம் எமது
வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு
மேலாகவே செயற்பட விழைகிறோம்.

# ஐந்து வருடங்கள் — ஒரே பார்வையில்

செயற்பாட்டு மீளாய்வு (மில்லியன் ரூபாக்களில்)

| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| காப்புறுதி செய்யப்பட்ட வியாபாரம் | 14,009 | 15,835 | 23,735 | 21,076 | 25,173 |
| மொத்த காப்புறுதி கட்டண வருமானம் | 133 | 143 | 174 | 163 | 195 |
| மொத்த கோரிக்கைகள் | 41 | 32 | 64 | 32 | 64 |
| தொழிற்பாட்டு செலவுகள் | 120 | 98 | 114 | 105 | 121 |
| தொழிற்பாட்டு மிகை | 30 | 65 | 82 | 73 | 90 |
| முதலீட்டு வருமானம் | 78 | 66 | 91 | 133 | 101 |
| தேறிய மிகை | 54 | 89 | 101 | 139 | 162 |
| மூலதனம் மற்றும் ஒதுக்கல் | 1128 | 1220 | 1388 | 1581 | 1758 |
| வரிகளும் தீர்வைகளும் | 67 | 42 | 73 | 67 | 29 |

## காப்புறுதி செய்யப்பட்ட வியாபாரம்




## வேறு விரிவான வருமானம




## மொத்த காப்புறுதி கட்டண வருமானம்




## தேறிய மிகை




## தொழிற்பாட்டு செலவுகள




## மொத்த கோரிக்கைகள்




## தொழிற்பாட்டு மிகை




## மூலதனம் மற்றும் ஒதுக்கல்




## வரிகளும் தீர்வைகளும்





# தலைவரின் மீளாய்வு

உலகளாவிய ரீதியிலும் உள்ளூரிலும் நெருக்கடிகள் நிறைந்த ஒரு வருடத்தில் எமது கூட்டுத்தாபனம் அனைத்து இடையூறுகளையும் சவால்களையும் வெற்றி கொண்டு மெச்சத்தக்க வகையில் செயல்பட முடிந்ததையிட்டு இலங்கை ஏற்றுமதி கடன் கூட்டுத்தாபனத்தின் தலைவர் என்றவகையில் மகிழ்ச்சியடைகிறேன்.

**உலக பொருளாதாரம்**

உலகளாவிய பொருளாதார சூழல் 2014 ஆம் ஆண்டில் முன்னேற்றம் கண்டது. எனினும் 2013 இன் பிற்பகுதியில் வழங்கப்பட்ட நம்பிக்கையூட்டுதலுக்குக்கேற்ப அது அமையவில்லை. உலக பொருளாதார வளர்ச்சி 2013 ஆம் ஆண்டைவிட 2.7மூ அதிகரித்து முடிவுற்றது. எனினும் அது எதிர்பார்ப்புகளுக்கு கீழேயே இருந்தது. ஆசியாவை தவிர்த்த அனைத்து பிராந்தியங்களும் நன்றாக செயற்பட்ட போதிலும் ஏமாற்றமே மிஞ்சியது. 2014 இல் யூரோ வலயம் 0.8மூ மட்டுமே வளர்ச்சி கண்டது. உக்ரேனில் இடம்பெற்ற பூகோள அரசியல் பதற்ற நிலை குடும்பங்களையும் வியாபார நம்பிக்கைகளையும் பாதித்தது.

லத்தின் அமெரிக்கா 1.2மூஎன்ற வளர்ச்சியையே கண்டது. அங்கு பாவனைப் பொருட்களின் அதிகரித்த விலை மற்றும் கிறிஸ்மஸ் காலத்தில் கேள்வி அதிகரித்தமை ஆகியவை மூலம்கூட நிலைமையை சீராக்க முடியவில்லை. இந்நிலையில் அமெரிக்காவின் வளர்ச்சி 2.2மூ த்துடன் முடிவுற்றது. இதற்கு குளிர்கால பருவநிலை காரணமாகியது. எதிர்பார்த்ததைவிட ஆசியா சிறிது சீரான வகையில் 4.8மூ வளர்ச்சியைக் கண்டது. 2014 இல் சீனாவின் வளர்ச்சி தொடர்ந்தும் குறைவடைந்தது. எவ்வாறெனினும் ஏனைய நாடுகளின் வளர்ச்சி ஆச்சரியமூட்டும் வகையில் சாதக பிரதிபலன்களை தந்தன. ஸ்பெயின் 1.3மூ லும் கிறீஸ் 25 வருட பின்னடைவில் இருந்து மீண்டு 0.2மூ லும் போர்த்துக்கல் 0.9மூமும் வளர்ச்சி கண்டன. யூரோ வலயத்துக்கு வெளியே ஐக்கிய இராச்சியம் எதிர்பாராதவாறு 3.1மூ வளர்ச்சி காட்டியது. ஐரோப்பா பின்னடைவில் இருந்து மீண்டு வந்தபோதும் வளர்ச்சி விகிதம் குறைவாகவே இருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் உலக பொருளாதார கண்ணோட்டத்தின்படி 2014 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி ஆரம்பத்தில் எதிர்பார்த்ததைவிட குறைவாகவே இருந்தது. பிரதான பொருளாதாரங்களிடையே குறிப்பிடத்தக்க மாறுபாடுகளையும் வளர்த்து வரும் பொருளாதாரத்தில் குறைந்த வளர்ச்சியையும் காண முடிந்தது.

2014 இல் உலகளாவிய ரீதியில் கச்சா எண்ணெய் விலை குறைவைக் காட்டியது. 2014 இல் அமெரிக்க பொருளாதாரத்தின் கண்ணோட்டம் வலிமையான பொருளாதார நிலையை காட்டிய போதிலும் அமெரிக்க டாலருக்கு எதிராக ஒரு சில உயர்வடைந்த மற்றும் வளர்ந்துவரும் நாணயங்கள் வீழ்ச்சியை காட்டின.

சர்வதேச நாணய நிதியத்தின்படி உலகளாவிய ரீதியிலான வளர்ச்சி மிதமான நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதிக கடன், அதிக அளவிலான வேலை இல்லாமை, மற்றும் குறைந்த முதலீடு ஆகியவை இதற்கு காரணமாகும். அமெரிக்காவின் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் சில உயர்ந்த பொருளாதாரங்களின் குறைந்த பணவீக்கம் ஆகியவை மேலதிக சவால்களை ஏற்படுத்தின. எனினும் 2015 இல் உலக ரீதியிலான வளர்ச்சி 3.5 சதவீதமாகவும் 2016 இல் அது 3.8 சதவீதமாகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உயர்ந்த பொருளாதாரத்தின் சிரமமான மீட்பு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குறைந்து வரும் உள்ளூர் விலைகள்,மற்றும் எண்ணெய் விலை கணிசமாக குறைதல் ஆகியவை இதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இலங்கை பொருளாதாரம்**

2014 இல் இலங்கை பொருளாதாரம் 7.4மூ என்ற உண்மையான மொத்த உள்ளூர் உற்பத்தியை அடைந்தது. 2013 உடன் ஒப்பிடுகையில் இது 7.2மூ ஆக இருந்தது. உலக பொருளாதாரத்தின் பலவித அபிவிருத்திகள், உள்ளூர் பொருளாதார செயற்பாடுகள் தொடர்தல் ஆகியவை கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளில் வளர்ச்சி தொடர்ந்து நிலைபெற உதவின.

மொத்த உள்ளூர் உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்கு மேலும் 32.3மூ அதிகரித்தது. இதில் துறையின் வளர்ச்சி 11.4மூ ஆகும். இது 2013 இல் 9.9மூ ஆக இருந்தது. இந்நிலையில் மொத்த உள்ளூர் உற்பத்தியில் 10.1மூ இருந்த விவசாய துறை

மோசமான காலநிலையினால் பாதிக்கப்பட்டு உண்மையான மொத்த உள்ளூர் உற்பத்திக்கு குறைந்தளவு பங்களிப்பையே வழங்க முடிந்தது. 2014 இல் விவசாய துறையின் வளர்ச்சி 0.3% மாகவே இருந்தது. முன்னைய வருடம் இது 4.7% இருந்தது குறிப்பிடத்தக்கது.

விவசாய துறை 2014 இல் 0.3% மாத்திரமே அதிகரித்து மொத்த உள்ளூர் உற்பத்தியில் 10.1% பங்களிப்பை வழங்கியது. 2013 இல் இது 10.8% இருந்தது. மோசமான காலநிலையினால் நெல்,ரப்பர் மற்றும் சிறு ஏற்றுமதி விளைபொருட்களின் வளர்ச்சி குறைந்தது.

ரப்பர் உற்பத்தி தொடர்ந்து 3 ஆவது ஆண்டிலும் குறைவைக் காட்டியது. இயற்கை ரப்பருக்கு சர்வதேச சந்தையில் கேள்வி குறைந்தமை மற்றும் மோசமான காலநிலை ஆகியவை இதற்கு காரணமாகின. தெங்கு உபதுறை 2014 இல் 7.9% என அதிகரிப்பைக் காட்டியபோதிலும் 2013 இல் இது 16.1% ஆக இருந்தது.

உற்பத்தி உபதுறை கைத்தொழில்துறையில் 53.4% ஆக உள்ளது. இது 2014 இல் 8.0% வளர்ச்சியைக் காட்டியது. உற்பத்தி உபதுறையில் அதிக பங்களிப்பை வழங்கும் தொழிற்சாலை கைத்தொழில் 2014 இல் 8.5% அதிகரிப்பைக் காட்டியது. வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் தேவை அதிகரித்தமை மற்றும் உள்ளூர் பெரும் பொருளாதார சூழல் சாதகமாக அமைந்ததும் இந்த அதிகரிப்புக்கு உதவியது.

2014 இல் சேவைகள் துறை 6.5% அதிகரிப்பைக் காட்டியது. மொத்த உள்ளூர் உற்பத்தியில் இத்துறை 57.6% பங்களிப்பைக் கொண்டுள்ளது. மொத்த மற்றும் சில்லறை வர்த்தக உபதுறையில் நல்ல பெறுபேறு கிடைத்ததால் ஏற்றுமதி மூலமான வருமானம் 2014 இல் 7.1% அதிகரித்து 11,130 மில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற பெறுமதியை எட்ட முடிந்தது. 2013 இல் இது 10,394 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. அதிக அளவிலான வெளிநாட்டு தேவை மற்றும் உள்ளூர் கைத்தொழில்துறை ஏற்றுமதி வருமானம் இவ்வருடம் அதிகரித்தது.

2014 இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் மூலமான வருமானம் 6.6% என 8262 மில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது. புடைவை மற்றும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. இதற்கு காரணமாகியது. இவை 9.4% மாக 4930 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பெறுமதியை எட்டியமை குறிப்பிடத்தக்கது.

விவசாய ஏற்றுமதி மூலமான வருமானம் 8.2% மாக 2794 மில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது. தெங்குப் பொருட்கள், தேயிலை மற்றும் ஒரு சில ஏற்றுமதி விளைபொருட்களின் ஏற்றுமதி அதிரித்தமை இதற்கு வழிவகுத்தது.

தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி 2014 இல் 74.2% மாக 356 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு அதிகரித்தது. தேங்காய் துருவல் உற்பத்திகள் குறிப்பாக உலர் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்தமை மற்றும் முன்னைய ஆண்டில் சீரான காலநிலை இடம்பெற்றமை ஆகியவை மூலமே இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.

மொத்த ஏற்றுமதியில் 15% பங்களிப்பினை வழங்கும் தேயிலை ஏற்றுமதி வருமானம் 2014 இல் 5.6% மாக அதிகரித்தது 2013 இல் இது 9.2% மாக இருந்தது. தேயிலை ஏற்றுமதியின் மெதுவான வளர்ச்சிக்கு ரஷ்யா, மத்திய கிழக்கு ஆகிய பிரதான ஏற்றுமதி நாடுகளில் இருந்து தேவை குறைந்ததே காரணமாகும் மேற்கூறிய நாடுகள் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 59%தை கொண்டுள்ளன. எண்ணெய் விலை குறைந்ததால் இந்த நாடுகளில் தேயிலை ஏற்றுமதி வருமானம் குறைந்தமை குறிப்பிடத்தக்கது. பூகோள அரசியல் விடயங்களால் ஏற்பட்ட பொருளாதார தடைகள் காரணமாக ரஷ்யாவின் ரூபள் நாணயம் வீழ்ச்சியடைந்ததால் ரஷ்யாவின் தேயிலை ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்பட்டது.

எவ்வாறெனினும் முன்னைய ஆண்டில் சிறப்பான ஏற்றுமதியை கண்டிருந்த வாசனைத் திரவியங்கள் மூலமான ஏற்றுமதி வருமானம் 2014 ஆம் ஆண்டில் குறைந்தது. 2013 இல் 38.8% மாக இருந்த வாசனை திரவியங்கள் ஏற்றுமதி 2014 இல் 25.6% மாகக் குறைந்து 265 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பெறுமதியை காட்டியது. பிரதான ஏற்றுமதி வாசனைப் பொருட்களான கறுவா, மிளகு, கராம்பு, சாதிக்காய் ஆகியவற்றின் அறுவடை குறைந்ததே இதற்குக் காரணமாகும். கடந்த வருடம் இந்த வாசனைத் திரவியங்களின் அறுவடை அதிக அளவில் இருந்தது. இதேவேளை ரப்பரின் ஏற்றுமதி வருமானமும் 36.5% குறைந்து 45 மில்லியன் அமெரிக்க டாலர்களை மட்டுமே காட்டியது. ரப்பரின் ஏற்றுமதி மட்டுமன்றி அதன் விலையும் குறைந்தது குறிப்பிடத்தக்கது.

ஏற்றுமதி சந்தை தொடர்பாக கவனமெடுத்தல் முக்கியமானதாகும். ஏனெனில் அது ஏற்றுமதி வருமானத்தில் ஸ்திர மற்ற நிலையை தோற்றுவிக்கக் கூடும். இலங்கை குறிப்பிட்ட சில சந்தைகளையே நம்பியுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கா ஆகியவை இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் மூன்றில் இரண்டு பங்கு என்ற அளவைக் கொண்டுள்ளது. அத்துடன் இலங்கை தேயிலை ஏற்றுமதியில் சுமார் 66% மத்திய கிழக்கு மற்றும் பொதுநலவாய சுதந்திர நாடுகளில் தங்கியுள்ளது. இந்த நாடுகள் எண்ணெய் ஏற்றுமதியை நம்பியுள்ளவை. இந்நிலையில் தமது உற்பத்திகளின் வருவிளைவுகளை எதிர்நோக்குவதை விட எமது ஏற்றுமதியாளர்கள் வளர்ந்து வரும் புதிய சந்தைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடியும்.

சுற்றுலாத்துறை மூலமான சம்பாத்தியம் 2014 இல் 41.7% அதிகரித்து 2431 மில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது. 2013 இல் இது 1715 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகை மற்றும் அவர்களின் அதிகரித்த செலவீனம் மற்றும் அதிக நாட்கள் தங்கியிருந்தமை ஆகியவை இந்த வளர்ச்சிக்கு உதவின.

### இலங்கை ஏற்றுமதி, கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை

குறிப்பிட்ட வருடத்தில் இ.ஏ.க.கா.கூ. குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாக செயற்பட்டுள்ளது. குறிப்பிட்ட வருடத்தில் அதன் காப்புறுதி செய்யப்பட்ட மொத்த வியாபாரம் 25.17 பில்லியன் ரூபாவாக இருந்தது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 19% வளர்ச்சியைக் காட்டுகிறது.

### நிதிசார் பெறுபேறுகள்

2014 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிசார் பெறுபேறுகளின் கண்ணோட்டம் (ரூபா மில்லியன்களில்)

| | 2014 | 2013 |
|---|---|---|
| மொத்த காப்புறுதி கட்டண வருமானம் | 194.55 | 163.36 |
| தொழிற்பாட்டு மிகை | 84.79 | 73.35 |
| தேறிய கோரிக்கைகள் | 37.81 | 30.68 |
| முதலீட்டு வருமானம் | 99.79 | 132.54 |
| மூலதனமும் ஒதுக்கீடுகளும் | 1757.92 | 1581.42 |
| தேறிய மிகை 161.69 | 139.36 | |
| வரிகளும் தீர்வைகளும் | 29.00 | 67 |

இ.ஏ.க.கா.கூ. இன் மொத்த காப்புறுதி கட்டண வருமானம் ஆனது 2014 இல் 194.55 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது 2013 இல் 163.36 மில்லியன் ரூபாவாக இருந்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் குறித்த ஆண்டுக்கான தேறிய மிகையானது 161.69 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டில் 139.69 மில்லியன் ரூபாவாக இருந்தது. கூட்டுத்தாபனத்தின் முறையே 1882.25 மில்லியன் ரூபா மற்றும் 1757.93 மில்லியன் ரூபாவாக இருந்துள்ளன.

கூட்டுத்தாபனத்தின் தேறிய மிகை குறிப்பிட்ட வருடத்தில் 89.79 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. கடந்த வருடம் அது 73.35 மில்லியன் ரூபாவாக இருந்தது. அதேநேரம் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய பணப்பாய்ச்சல் 2014 இல் 192.43 மில்லியன் ரூபாவாக இருந்தது.

### காப்புறுதிக் கட்டண வருமானம்

காப்புறுதி கட்டண அமைப்பானது லாபமற்ற நட்டம் அற்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. மொத்த காப்புறுதி கட்டண வருமானமானது குறிப்பிட்ட வருடத்தில் மிகப் பெரிய அளவில் 194.55 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. முன்னைய வருடம் அது 163.36 மில்லியன் ரூபாவாக இருந்தது. எமது பிரதான உற்பத்தி பொருளான மொத்த காப்புறுதி கட்டண வருமானம், விற்பனையாளர் இடர் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 124.69 மில்லியன் ரூபாவில் இருந்து இப்போது 151.72 மில்லியன் ரூபாவாக 22மூ குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. அதேபோன்று மீளாய்வு ஆண்டுக்கான காலப்பகுதியில் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னரான கடன் உத்தரவாதங்களிலிருந்தான காப்புறுதி கட்டணம் கப்பலில் ஏற்றப்பட்ட பின்னரான கடன் உத்தரவாதங்கள் ஆகியவையும் அதிகரிப்பைக் காட்டின.

### தொழிற்பாடுகளிலிருந்தான தேறிய வருமானம்

2013 இல் 143.21 மில்லியன் ரூபாவாக இருந்த கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான தேறிய வருமானம் 2014 ஆம் ஆண்டில் 167.7 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. இது காப்புறுதி கட்டண வருமானத்தில் கவர்ச்சியான வளர்ச்சியையும் நிர்வாக செலவுகளில் வீழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

### முதலீட்டு வருமானம்

கூட்டுத்தாபனத்தின் முதலீட்டு வருமானத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு திறைசேரி பிணையத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன்மூலம் மீளாய்வுக்கான ஆண்டில் கிடைத்த வட்டி வீதம் தொடர்ந்தும் குறைவாகவே இருந்து வந்தது. எனவே மீளாய்வுக்கான ஆண்டில் முதலீட்டு வருமானம் 99.79 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது முன்னைய ஆண்டில் இருந்ததைவிட 24மூ சதவீதம் (22.76 மில்லியன் ரூபா) குறைவானதாகும்.

### வரிகளும் தீர்வைகளும்

எதிர்கால பொறுப்புகளை தாங்கும் வகையில் தேவையான நிதியமொன்றை கட்டியெழுப்புமாறு இ.ஏ.க.கா.கூட்டுத்தாபனம் சில வருடங்களாகவே கேட்டுக்கொள்ளப்பட்ட போதிலும், அதற்கான வசதியை ஏற்படுத்தும் நோக்கில் அப்போதைய சட்டமியற்றுவோர் இ.ஏ.க.கா.கூட்டுத்தாபனம் அரசாங்கத்துக்கு பல்வேறு வரிகளைச் செலுத்துவதில் இருந்து விலக்களித்தனர். எவ்வாறெனினும் வரி அதிகாரிகள் இ.ஏ.க.கா. கூட்டுத்தாபனத்தை ஏற்றுமதிக்கு உதவும் ஒரு முகவராக கருதாததன் காரணமாக கூட்டுத்தாபனமானது அரசாங்க வரிகளை தொடர்ந்தும் செலுத்தி வருகிறது.

மீளாய்வுக்கான காலகட்டத்தில் கூட்டுத்தாபனம் நிதிச்சேவைகளுக்கான பெறுமதி வரி மற்றும் வருமான வரியாக 28.78 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளது.

### புதிய முயற்சிகள்

வியாபாரங்கள் வளர்ச்சியடைந்து புதிய சந்தைகள் தோன்றுமிடத்து, கிடைக்கும் வாய்ப்புகள் அவை உள்ளடக்கும் இடர்களை வைத்தே கணக்கெடுக்கப்படுகின்றன. அதன் காரணமாக வியாபாரங்கள் எதிர்நோக்க வேண்டிய இடர்களை கண்காணிக்கவும் சமாளிக்கவும் மதிநுட்பமான முறைமைகளை தேட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனைச் செயற்படுத்தும் நோக்கில் காப்புறுதி கணிப்பு வழிகளை உருவாக்க எமது ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் வகையில் நாம் எமது விதிகளை இயக்குவோருக்கு ஒத்துழைப்பு வழங்குகிறோம். இவ்வாறான விதி முறைமைகளை நாம் அடுத்த வருடம் உருவாக்கித்தர தீர்மானித்துள்ளோம். அதேபோன்று அடுத்த மூன்று வருட காலத்துக்குள் கூட்டுத்தாபனம் அதன் வாடிக்கையாளர்களுக்கு சீராகவும் உரிய வகையிலும் உதவக் கூடியவாறான முறைமைகள் அனைத்தையும் ஆவணப்படுத்தும்.

### புதிய உற்பத்திகள் அபிவிருத்தி

உற்பத்திகளானவை வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் அவற்றை உருவாக்குவதில் எந்தப் பயனும் இல்லை. அதனால்தான் நாம் எமது வாடிக்கையாளர்களுடன் நெருங்கிச் செயற்படுகிறோம். அதன்மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் சிறப்பான சேவையை வழங்குவதுடன் அவர்கள் எங்கு, எவ்வாறு வர்த்தகம் செய்கின்றனரோ அவர்களது வர்த்தகத்தை சிறப்பாக செய்வதற்கான ஒத்துழைப்பு வழங்குவதையும், நாம் உறுதி செய்கிறோம். குறிப்பிட்ட ஆண்டில் கூட்டுத்தாபனம் மிகவும் எளிதான நடைமுறையில் அமைந்த முதலாவது புரள்வு அடிப்படையில் அமைந்த காப்புறுதி கொள்கையை வெளியிட்டது. அந்த அனுபவத்தின்மூலம் வாடிக்கையாளர்களுக்கு உசிதமான காப்பீடுகளை எமது ஏற்றுமதியாளர்களுக்கு நாம் எதிர்காலத்தில் சமர்ப்பிக்க முடியும். பெரும்பாலான ஏற்றுமதியாளர்கள் பாதுகாப்பான சந்தையில் உள்ள கொள்வனவாளர்களுடன் செயற்படவே விரும்புகின்றனர்.

### கொள்கை மாற்றம்

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் கூட்டுத்தாபனமானது காப்புறுதிக் கட்டண வருமானத்தில் கிடைத்த வருமானத்தை 'உண்மையாக கிடைத்தது என்ற அடிப்படையில்' மேற்கொண்டதால் மிகவும் யதார்த்தமான காப்புறுதி கட்டணத்தை அது காட்டியது.

### சர்வதேச கூட்டுறவை வலுப்படுத்துதல்

இந்த வருடத்துக்கான செயற்திட்டத்தை நாம் தயாரித்துக் கொண்டிருந்த போது அப்போது இடம்பெற்ற திட்டத்துக்கு பொதுநலவாய செயலகத்துடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தோம். அதேவேளை எமது கொள்திறனை கட்டியெழுப்புவதற்காக தொழில்நுட்ப உதவி தேவைப்பட்டது. அதற்கான வெளித் தொடர்புகளை விருத்தி செய்வதற்கு கூட்டுத்தாபனம் முன்னுரிமை வழங்கியது. இவ்விடயம் தொடர்பாக பொதுநலவாய செயலகத்தின் தொழில்நுட்ப பங்காளியான இந்தியாவின் எக்ஸிம் வங்கி தயாரித்த

ஆய்வறிக்கை எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளைப் பற்றி எம்மை மீண்டும் யோசிக்க வைத்தது. வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு அவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்ற உந்துதலை எமக்குள் ஏற்படுத்தியது.

ஆசிய கடன் உதவி நிறுவனங்கள் கூட்டிணைப்பில் (யுஊஐஜஊ) சேர்ந்துக் கொள்ள நாம் 2014 மே மாதத்தில் விண்ணப்பித்தோம். 2014 அக்டோபரில் கோலாலம்பூர், மலேஷியாவில் நடைபெற்ற பிரதான பேராளர்கள் கூட்டத்தில் எமது அங்கத்துவ விண்ணப்பம் கலந்துரையாடப்பட்டு இரண்டு வருடங்களுக்கு எம்மை பார்வையாளர் நிறுவனமாக சேர்த்துக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

இந்தியாவின் இறக்குமதி – ஏற்றுமதி வங்கியின் அழைப்பின் பேரில் இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆசிய எக்ஸிம் வங்கிகள் மன்றத்தின் அங்கத்தவர்களுடன் இணைந்தியங்கும் வாய்ப்பைப் பெற்றது. அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியை பெறவும் முடிந்தது. இவ்வருடத்தில் கிடைத்த இவ்வாறான வாய்ப்புகள் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால கொள்திறன்களை கட்டியெழுப்ப எமக்கு உதவியது.

**2015ன் கண்ணோட்டம்**

2015 இன் கண்ணோட்டம் அதிகரித்த வளர்ச்சிக்கானது. எனினும் அதில் பல எச்சரிக்கைகள் அடங்கியுள்ளன. பணப்புழக்க தளர்வு அச்சுறுத்தல் தொடர்பான எச்சரிக்கை பூகோள அரசியல் பதற்றம் மற்றும் எண்ணெய் மற்றும் சரக்கு பொருட்களின் விலைகள் குறைதல் ஆகியவையும் பிரச்சினைக்குரிய ஏனைய விடயங்களாகும்.

2015 ஆம் ஆண்டில் உலக பொருளாதாரம் 3.2மூ மொத்த உள்ளூர் உற்பத்தி வளர்ச்சி வீதத்தைக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து பிராந்தியங்களும் இந்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ஆசியா தொடர்ந்தும் மிகப்பெரிய பங்களிப்பாளராக விளங்கும். அதன் வளர்ச்சி வீதம் 4.8மூ மாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. லத்தீன் அமெரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பா ஆகியவை முறையே காட்டிய 1.8மூ மற்றும் 1.7மூ என்பவற்றை விட இது குறிப்பிடத்தக்க வகையில் அதிகமானதாகும்.

அதேவேளை அமெரிக்கா 3.0மூ என்ற சீரான வளர்ச்சி வீத பங்களிப்பை வழங்கும் நேரம் யூரோ வலயம் குறைந்த ஆனால் ஓரளவு சாதகமான 1.1மூ வளர்ச்சியை காட்டி நிற்கிறது.

இந்நிலையில் உலக வர்த்த வீதம் 4.0மூ வளர்ச்சியைக் காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள பதற்ற நிலை மத்திய கிழக்கில் இருந்து எண்ணெய் விநியோகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம். தற்போதைய குறைந்த விலையை அது அதிகரிக்கக் கூடும். அத்துடன் விலை மீட்புக்கு இடைஞ்சலையும் ஏற்படுத்தலாம்.

சீனாவின் வளர்ச்சி அதிகாரிகளால் கவனமாக நிர்வகிக்கப்பட்டு வரும் நிலையில் அதன் கிட்டத்தட்ட 5மூ வளர்ச்சி வீதம் கவனத்தில் கொள்ளத்தக்கது. சீனா சரக்குப் பொருட்கள் மற்றும் அவற்றின் ஏற்றுமதி தொடர்பில் கொண்டுள்ள தாக்கத்தை இது பலப்படுத்துவதாக உள்ளது. இதேவேளை லத்தீன் அமெரிக்க ஏற்றுமதிகள் உலக வளர்ச்சியைக் கடந்த வருடம் பாதித்ததாகச் சொல்ல முடியும்.

இந்த பின்னணியில் வாடிக்கையாளர் சேவையின் சிறப்பு 2015 இல் தொடர்ந்தும் முக்கியமாக இருக்கும். இது கூட்டுத்தாபனத்தின் சேவைத் தரத்தையும் தக்க வைப்பு மட்டத்தையும் உறுதி செய்வதாக அமையும்.

**நன்றிநவிலல்**

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மீது எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர்கள், இலங்கையின் ஏற்றுமதியாளர் சமூகம் மற்றும் வர்த்தக வங்கிகள் வைத்திருக்கும் தளராத நம்பிக்கைக்கும் மனவுறுதிக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கையின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் எமது முயற்சிகளுக்கு அவர்களது தீவிர ஈடுபாடு மற்றும் கூட்டுறவை நாம் எதிர்பார்த்துள்ளோம்.

சர்வதேச வர்த்தகத்தினை ஊக்குவிப்பதில் வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கைகளினை எடுத்துவரும் அதிமேதகு கௌரவ நிதி அமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் குறிப்பிட்ட மீளாய்வுக்கான கால கட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அவர் தொடர்ந்து காட்டிவரும் அக்கறைக்கும் எனது நன்றி உரித்தாகட்டும். அதேநேரம், கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் சரத் அமுனுகம வழங்கிய வழிகாட்டலுக்கும் ஆதரவுக்கும் எனது நன்றியை பதிவு செய்கிறேன்.

கூட்டுத்தாபனத்தின் கொள்கைத் திறனை கட்டியெழுப்பும் இரண்டாவது அங்கத்தில் பொதுநலவாய செயலகத்தின் தொழில்நுட்ப உதவியினை பெற்றுக்கொள்வதற்கு உதவிய அவரது தனிப்பட்ட கடமையுணர்வு பெரிதும் மெச்சத்தக்கது.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்களினால் வழங்கப்பட்ட சேவையை நான் பெரிதும் மெச்சுகிறேன்.**

நாம் கேட்டுக்கொண்ட போதெல்லாம் எமக்கு தாராளமாக உதவிய பெர்ன் சங்க செயலகம் மற்றும் எமது வெளிநாட்டு கூட்டாளிகள் மற்றும் ஏனைய வியாபார பங்காளிகள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். கூட்டாக கிடைத்த அவர்களது அறிவுச் சொத்து மற்றும் வளங்கள் ஏற்றுமதி கடன் காப்புறுதியின் தொழில்நுட்ப விடயங்களில் கூட்டுத்தாபனத்துக்கு பெரும் வலுவாக அமைந்தது.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தமது ஒத்துழைப்பினை நல்கிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் மேலதிக செயலாளர்கள் மற்றும் ஏனைய அலுவலகங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இலங்கை மத்திய வங்கி, வர்த்தக திணைக்களம் மற்றும் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் உறுதுணையாகவிருந்த பல்வேறு வர்த்தக மன்றங்களின் அதிகாரிகளுக்கும் எமது மெச்சுதல்களை பதிவு செய்கிறேன்.

மேலும் கொள்திறன் கட்டியெழுப்பல் திட்டத்துக்கு பங்காளிகள் காட்டிய ஈடுபாடு பாராட்டுக்குரியது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கும் குறிப்பாக தூதரக வர்த்தக அதிகாரிகளுக்கும் மற்றும் உலகளாவிய ரீதியில் அமைந்துள்ள கடன் சேகரிப்பு முகவர்களுக்கு அவர்களது கூட்டுறவு மற்றும் சர்வதேச வர்த்தக இயல்புச் செயற்பாட்டுக்கும், இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஏற்றுமதி சமூகத்தின் சார்பாக எமது நன்றிகளை தெரிவிக்கிறோம்.

ஏற்றுமதி கடன் காப்புறுதி கைத்தொழிலில் எமது கொள்திறனை கட்டியெழுப்பவும் அத்திட்டத்தின் இரண்டாவது அங்கத்துக்கும் ஆதரவு வழங்குவதாக கொடுத்த உத்தரவாதத்துக்கும் பொதுநலவாய செயலகம் கொடுத்த தொழில்நுட்ப ஆதரவினை நான் மெச்சுகிறேன்.

இதற்கு மேலதிகமாக கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் 2014 மார்ச் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஏற்றுமதி நிதி தொடர்பிலான தேசிய கருத்தரங்குக்கு அனுசரணை வழங்க இணக்கம் தெரிவித்தமைக்காக எனது விசேட பாராட்டும் நன்றிகளும் பொதுநலவாய செயலகத்துக்கு உரித்தாகட்டும்.

தமது தளராத விசுவாசத்தினையும் மேன்மை மிக்க இணக்கப்பாட்டுடன் கூடிய சேவையினை அர்ப்பணிப்புடன் வழங்கிய எமது முகாமைத்துவத்துக்கும் உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மூல வளங்கள் தொடர்பிலான பல்வேறு அழுத்தங்கள் காணப்பட்ட போதிலும் கடந்த வருடம் தமது அயராத உழைப்பின் மூலமாக எமது காப்புறுதிதாரர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் அவர்களின் தேவையறிந்து சிறப்பான சேவையினை வழங்கியதையிட்டு நான் பெரிதும் மனநிறைவடைகிறேன். இத்தகைய அர்ப்பணிப்புடன் கூடிய உத்வேகமானது கூட்டுத்தாபனத்தின் இப்பெரு வெற்றிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

**டி.பி.மெண்டிஸ்**
**ஜனாதிபதி ஆலோசகர்**
**தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்**

# பணிப்பாளர் சபை

1. டி.பி.மென்டிஸ்
தலைவரின் பேரவை
தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்

திருமதி குசும் தசநாயக்க
பணிப்பாளர், ஆளுநரின் செயலகம்
இலங்கை மத்திய வங்கி

2 திரு. ஏ.கே.செனவிரத்ன
மேலதிக செயலாளர்
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

3 திரு.கே.எம்.எம். சிரிவர்தன
பணிப்பாளர் நாயகம்
அரசிறை கொள்கை திணைக்களம்
நிதி திட்டமிடல் அமைச்சு

# இலங்கை ஏற்றுமதி கடன்காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம்

**டி.பி.மெண்டிஸ் பி.சி** **தலைவர்** மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்

**டி.எச்.ஜே. ரணசிங்க** பொது முகாமையாளர்

**திருமதி ஆர்.எம்.யூ. என். பீரிஸ்**
பிரதி பொது முகாமையாளர்

**தம்மிக அளுத்கே** உதவி பொது முகாமையாளர்

**மொஹான் சில்வா** உதவி பொது முகாமையாளர்

**திருமதி மயூரி முதலிகே** உதவி பொது முகாமையாளர்

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பொருட்கள் மற்றும் சேவைகள்

ஏற்றுமதி கடன் காப்புறுதியானது, வங்கிகளுக்கு கடன் உறுதிகளை வழங்கும் பிரதான சேவையை உந்துதலாகக் கொண்டது. நாட்டிலுள்ள ஏற்றுமதி சமூகத்தின் நலனுக்காக இ.ஏ.க.கா. கூட்டுத்தாபனம் இந்த சேவையை வழங்குகிறது. எமது சேவைகள் ஏற்றுமதியாளர்களின் நிதி உத்தரவாதத்தை பாதுகாக்கும் அவர்களது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை எளிதாக்கும் வகையில் வர்த்தக வங்கிகளிடம் இருந்து

#### விற்பனையாளர் இடர்

விற்பனையாளர் இடரானது ஏற்றுமதியாளர் சமூகத்துக்கான எமது பொருட்கள் மற்றும் சேவைகளின் அடிப்படை மூலாதாரமாக விளங்குகின்றது. விற்பனையாளர் இடரானது வர்த்தக மற்றும் அரசியல் இடர்களின் காரணமாக கடல் கடந்த கொள்வனவாளர்களினால் கொடுப்பனவு செலுத்தப்படாமை அல்லது தாமதமாக கொடுப்பனவு செலுத்தப்படுதல் போன்ற இடர்களிலிருந்து ஏற்றுமதியாளர்களுக்கு பாதுகாப்பளிக்கின்றது.

#### வர்த்தக இடர்கள்

கடனை தீர்க்க வகையற்ற அல்லது முறிவடைந்த நிலை

தாமதக் கொடுப்பனவு

ஒப்பந்தம் நிராகரிப்பு

#### அரசியல் இடர்கள்

வெளிநாட்டு நாணயமாற்று அனுப்புதலில் தாமதம்
இறக்குமதி உரிமம் ரத்துச் செய்யப்படுதல்
இறக்குமதி தடை
கொடுப்பனவு இடைநிறுத்தம்
போர்,புரட்சி, கலகம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள்

கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டு வரும் பல்வேறு வகையான காப்புறுதிகளில் அதன் மொத்த புரள்வினை ஈடு செய்யும் காப்புறுதி மிகவும் பிரபலமானது. குறிப்பிட்ட விசேடத்துவ துறைகளில் தனித்துவமான தேவைகளை வழங்குவதற்கான வசதிகளும் உள்ளன.

ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் ஏற்றுமதிக்கடன் காப்புறுதிகளின் வகைகள் பின்வருமாறு

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>மொத்த புரள்வு<br>அனைத்து கொள்வனவாளர்களுக்கும்

இக்காப்புறுதியானது வர்த்தக இடர் மற்றும் அரசியல் இடரிலிருந்து ஏற்றுமதியாளர்களைப் பாதுகாக்கிறது. இதன் கீழ் நீடித்த கொடுப்பனவு நியதிகளின் அடிப்படையில் நாம் மொத்த கப்பல் சரக்குகளை காப்பீடு செய்கிறோம்.

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>கொள்வனவாளர் விசேடத்துவம்

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொள்வனவாளர்களின் வர்த்தக இடர் மற்றும் பொருளாதார இடரிலிருந்து ஏற்றுமதியாளர்களை பாதுகாக்கும் காப்புறுதி

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>நாடு விசேடத்துவம்

விசேடத்துவமான நாடொன்றின் கொள்வனவாளர்களின் வர்த்தக இடர் மற்றும் அரசியல் இடரிலிருந்து ஏற்றுமதியாளர்களை பாதுகாக்கும் காப்புறுதி

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>அரசியல் இடர்

விசேடத்துவ நாடொன்றின் கொள்வனவாளர்களின் அரசியல் இடரிலிருந்து ஏற்றுமதியாளர்களைப் பாதுகாக்கும் காப்புறுதி

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>உலகளாவிய உள்ளடக்கம்

இக்காப்புறுதியானது இலங்கையில் உள்ள கரைகடந்த ஏற்றுமதி கம்பனிகளுக்கு வழங்கப்படுகிறது.

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>துணை இடர்

தாய்க் கம்பனியானது இலங்கையில் இருக்குமிடத்து இன்னொரு நாட்டில் உள்ள துணைக் கம்பனியொன்றில் உள்ள ஏற்றுமதியாளர்களின் இடர்களை காப்பீடு செய்கிறது.

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>இறுதி கொள்வனவாளர்களின் உள்ளடக்கம்

இறுதி கொள்வனவாளர்களின் வர்த்தக மற்றும் அரசியல் இடர்களை காப்பீடு செய்கின்ற இலங்கை ஏற்றுமதியாளர்களை பாதுகாக்கும் காப்புறுதி

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>இருப்புகளின் ஒப்படைப்பு

இருப்புகளின் ஒப்படைப்பின் வர்த்தக இடர் மற்றும் அரசியல் இடர் மீதான இலங்கை ஏற்றுமதியாளர்களின் காப்பீடு

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>நுழைவு வர்த்தகம்

நுழைவு வர்த்தகத்தினால் இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படுகின்ற வர்த்தக மற்றும் அரசியல் ரீதியான இடர்களை காப்பீடு செய்கிறது.

#### விற்பனையாளர் இடர் காப்புறுதி<br>விற்பனையாளர் இடர் பரந்துபட்ட சேவை

வர்த்தக மற்றும் அரசியல் இடர்களிலிருந்து சேவைத்துறை ஏற்றுமதியாளர்களை பாதுகாப்பதற்கான காப்புறுதி

**விற்பனையாளர் இடர் காப்புறுதி**
**உள்நாட்டு கடன் காப்புறுதி**

இக்காப்புறுதியானது இலங்கையிலுள்ள கொள்வனவாளர்களுக்கு பொருட்களை அனுப்புதல் மற்றும் சேவைகளை வழங்குதலுடன் தொடர்புடைய வர்த்தக இடர்களிலிருந்து காப்புறுதிதாரியை பாதுகாக்குகிறது.

**வங்கிகளுக்கு கிடைக்கக் கூடிய ஏற்றுமதி கடன் உத்தரவாதங்கள்**

வங்கிகளுக்கான கடன் உத்தரவாதங்கள், நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்கள் நிதியிடும் போது ஏற்படக்கூடிய வங்கிக்கான நட்டங்களின் இடரினைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்படுகின்றன. இது, வங்கிகளுக்கு அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு வங்கிகளினால் தொல்லைகளற்ற நிதியிடல் ஏற்பாட்டு வசதியை அளிக்கிறது. இத்தகைய உத்தரவாதங்களினூடாக இ.ஏ.க.கா கூட்டுத்தாபனமானது, வங்கிகளினால் ஏற்றுமதியாளர்களின் கையறு நிலை அல்லது அவற்றின் பகுதியினை மீளளிக்கத் தவறுவதன் காரணமாக ஏற்பட்ட நட்டங்களை 66.66 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையில் மீளச் செலுத்த இலங்கை ஏற்றுமதி கடன் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்டது. ஏற்றுமதியாளர்

வங்கிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு வகையான ஏற்றுமதி கடன் உத்தரவாதங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**கப்பலில் ஏற்றுவதற்கு முன்னரான கடன் உத்தரவாதங்கள் (தனி நபர்)**

ஒத்திசைவான நிலையிலுள்ள தனிநபர் இடர்களானவை ஏனைய வெளிநாடுகளின் ரூபாய்களில் 66.66மூ வரை காப்பீடு செய்ய முடியும். இத்தகைய உத்தரவாதங்கள் மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல், பொருட்களை தயாரித்தலும் பதப்படுத்தலும் மற்றும், ஏற்றுமதி பொருட்களைப் பொதி செய்தல் ஆகியவற்றுக்கான கடன் கடிதங்கள் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகள் என்பவற்றுக்கெதிராக ஏற்றுமதியாளர்களுக்கு கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் நிதியை வழங்குவதற்கு நிதிசார் நிறுவனங்களினை வசதிப்படுத்துகின்றன.

**கப்பலில் ஏற்றிய பின்னரான கடன் உத்தரவாதங்கள் (தனிநபர்)**

இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்தகைய வசதிப்படுத்தல்களின் கீழ் ஏற்றுமதி பட்டியல்களை கொள்வனவு செய்தல் பேரம் பேசுதல் அல்லது கழிவு வழங்குதல் போன்றவை மூலம் கப்பலில் ஏற்றிய பின்னர் தொழிற்படு மூலதனத்தினை நிதியளிக்கும் பொருட்டு நிதி நிறுவனங்களுக்கு சிறந்த அணுகுமுறைகள் வழங்கப்படுகின்றன.

**கப்பலில் ஏற்றிய முன்∴ பின்னரான கடன் உத்தரவாதங்களின் மொத்தப் புரள்வு**

இத்தகைய உத்தரவாதங்கள், ஏற்றுமதியாளர்களுக்கு கப்பல் சரக்குகளின் முன்∴ பின்னரான முற்பணங்களின் மூலம் வழங்கப்பட்ட முழு ஏற்றுமதி கடன் பெறுமதியையும் காப்பீடு செய்வதற்கு வங்கிகளுக்கு வசதியளிக்கின்றன. இது உயர்ந்த காப்பீடு மற்றும் குறைந்த காப்புறுதி கட்டண விகிதங்களில் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கான முற்பணங்களையும் ஈடு செய்கிறது.

**ஏற்றுமதி உற்பத்திப் பொருள் கடன் உத்தரவாதங்கள்**

இத்திட்டமானது அடைமானப் பொருட்களுக்கு, அதிகளவிலான தாக்கத்தினை உண்டு பண்ணாமல் ஏற்றுமதியாளர்களுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளினை தயாரிப்பதற்காக உற்பதியாளர்களுக்கு தொழிற்படு மூலதனத்தினை நிதியிடுவதற்கு நிதி நிறுவனங்களுக்கு வசதியளிக்கின்றது.

**ஏற்றுமதி செயல் நிறைவேற்ற உத்தரவாதங்கள்**

இது இலங்கையிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிக்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒப்பந்தங்களின் செயல் நிறைவேற்றம் காரணமாக உத்தரவாதம் அளிக்கின்ற வெளிநாட்டு கொள்வனவாளர்கள் அல்லது அரசாங்க அதிகாரிகளுக்கு அவர்களின் வாடிக்கையாளர் சார்பில் அவர்கள் வழங்குகின்ற உத்தரவாதங்கள் மற்றும் பிணை வழங்கப்படும் ஒரு எதிரிடை உத்தரவாதமாகும். இந்த விடயங்கள் ஏற்றுமதி ஒப்பந்தங்களின் பொது திட்ட செயல் நிறைவேற்றத்தினை உள்ளடக்குகின்றன. அதாவது நிர்மாண வேலைகள் அவ்வாறே பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகளின் செயலாற்று ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

**கேழ்வ அனுப்புனர்களின் செயல் நிறைவேற்ற நிலுவையினை ஈடு செய்யும் ஏற்றுமதி செய் நிறைவேற்ற கடன் உத்தரவாதம்**

இந்த உத்தரவாதமானது கேழ்வு அனுப்புனரொருவருக்கு கடன் வசதிகளை வழங்குகின்ற விமான சேவை ஒன்றுக்கு வங்கி உத்தரவாதத்தினை வழங்குகின்ற வங்கியினை கருத்தில் கொண்டு வங்கியொன்றுக்கு வழங்கப்படும் எதிரிடை கடன் உத்தரவாதமாகும்.

**ஏற்றுமதி செயல் நிறைவேற்ற கடன் உத்தரவாதங்கள் ஈடு செய்யும் ஏ.டி.எம். கார்னற் முறைமை**

இத்தகைய உத்தரவாதங்கள் சர்வதேச வர்த்தக மன்றம் (ஐஊஊ) இலங்கையிலிருந்து ஏ.டி.எம். கார்னட் ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஏற்றுமதியாளர்களுக்காக சர்வதேச வர்த்தக மன்றத்திற்கு வழங்கப்படுகின்றன. ஏ.டி.எம். கார்னட் முறைமையானது, குறித்த நோக்கத்துக்காக வெளிநாட்டு இறக்குமதி பொருட்களுக்கு தற்காலிக தீர்வை விலக்களிக்கப்பினை அனுமதிக்கின்ற சர்வதேச சுங்க ஆவணமாகும். (உதாரணம் இரத்தினக்கற்களும் ஆபரணங்களும்)

**வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர்களுக்கு பயணச் செலவினை ஈடுசெய்யும் பொருட்டு முற்பணமாக வழங்கும் புரள்வு வங்கி உத்தரவாதம் "அபாரா"**

வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் முழுமையான புறப்படு முன்னரான கடன்களுக்கு வங்கிகளில் காப்பீடு செய்யும் வகையில் இந்த உத்தரவாத திட்டமானது வழங்கப்படுகின்றது.

# ஏனைய சேவைகள்

### பிஸ் இன்போ (BiZinfo) - கடன் மற்றும் நிதிசார் தகவல

இந்த உற்பத்தியானது இலங்கை ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் தொடர்பான கடன் மற்றும் நிலவர அறிக்கைகளை வங்கிகளுக்கு வழங்குகின்றது. இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனமானது, உலகளாவிய ரீதியிலான அமைப்பாளர்கள வலையமைப்பில் இருந்து கடன் மற்றும் நிலவர அறிக்கைகளை பெற்று அவற்றை மீள வழங்குகிறது.

### இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனமானது

ஏற்றுமதியாளர்களின் சார்பில் சேகரிக்கப்படாத கடன்களின் மீள் அளவீடு தொடர்பிலான செயல் முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு உலகளாவிய கடன் சேகரிப்பு முகவராண்மைகளின் குழுவொன்றுடன் பங்குடமையில் ஈடுபட்டு வருகிறது. மீள் அறவிடம் மதிப்பீடு சேவையும் அவ்வாறே பெறத்தக்க முகாமைத்துவம் தொடர்பிலான மதியுரையும் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றது.

# ஏற்றுமதி கடன் காப்புறுதி

குறுக்கு எல்லை வர்த்தகத்தில் இடர்உபகரணமாக கடன் காப்புறுதியின் பெறுமதி உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றுள்ளதால் அதற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குறுகிய கால வியாபாரத்தில் காப்பீடு செய்யப்பட்ட ஏற்றுமதிகளின் புரள்வு அல்லது கடன் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட கப்பற் சரக்கின் பெறுமதியை பிரதிநிதித்துவம் செய்கிறது. காப்பீடு செய்யப்பட்ட ஏற்றுமதிகள் வழங்கப்பட்ட கடன் எல்லைக்கு அமைவாக இருக்காது. மீளாய்வுக்கான குறிப்பிட்ட ஆண்டில் இ.ஏ.க.காப்புறுதி கூட்டுத்தாபனமானது அனைத்து தரப்பு ஏற்றுமதியாளர்களுக்கு உதவுகிறது. தனது ஏற்றுமதி கடன் காப்புறுதிக்கு ஊடாக கூட்டுத்தாபனமானது 25 பில்லியன் ரூபா பெறுமதியான ஏற்றுமதிகளுக்கு உதவியுள்ளது.

நாடுகளின் இடர் மட்டங்கள் குறிப்பிட்ட நாடுகள் மற்றும் பிராந்தியத்தின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையின் அடிப்படையில் காலத்துக்கு காலம் மாற்றமடையும். அதனால் நாடுகளில் உள்ள உண்மையான இடர் மட்டங்களை பிரதிபலிப்பதற்கு குறிப்பிட்ட நாட்டின் இடர் அளவினை குறிப்பிட்ட காலத்துக்கு காலம் மீளாய்வு செய்தல் தேவையானதாகும்.

நாடுகளின் இடர் அளவுகள் வாடிக்கையாளர் கேட்டுக்கொள்வதன் பேரில் இடம்பெறும். அதன் பேரில் நாட்டு இடர் அளவுகளில் மாற்றம் அல்லது ஏற்றுமதி போக்கின் அதிகரிப்பு இடம்பெறும். ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் நிலையானது பெரும் பொருளாதார குறிகாட்டிகள் நடப்பு பொருளாதார விடயங்கள் மற்றும் தற்போதைய அரசியல் விவகாரங்கள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மதிப்பிடப்படும். அதேவேளை இலங்கையின் ஏற்றுமதி போக்கு தொடர்பாக தீர்மானம் எடுக்கும்போது மற்றைய பொருளாதார கணிப்புகளின் மதிப்பீடு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

### காப்புறுதியளிக்கப்பட்ட வியாபாரம்

2014 ஜனவதி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் மொத்த காப்புறுதியளிக்கப்பட்ட வியாபாரம் 21 சதவீத வளர்ச்சியை அடைத்து 25 பில்லியன் ரூபாவை எட்டியது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 21.07 பில்லியன் ரூபாவாக இருந்தது.

2014 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் காப்புறுதியளிக்கப்பட்ட வியாபாரத்தின் வளர்ச்சியை கீழே உள்ள வரைபடம் காட்டுகிறது.

### காப்புறுதியளிக்கப்பட்டவியாபாரம் — மாதாந்தம்




### பிரதான சந்தைகள்

2014 ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் மேற்கொண்ட காப்புறுதியளிக்கப்பட்ட மொத்த ஏற்றுமதி வியாபாரத்தில் 45 சதவீதத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அமெரிக்கா ஐக்கிய ராஜ்ஜியம், ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவை கொண்டிருந்தன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் காப்புறுதியளிக்கப்பட்ட மொத்த வியாபாரத்தில் 14 சதவீதமான மிகப் பெரிய பங்கினை வகித்தது. இது 24 சதவீத வளர்ச்சியை காட்டியதுடன் 3.6 பில்லியன் ரூபாவை எட்டியது. இலங்கையில் இருந்து தேயிலை ஏற்றுமதி அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாகும்.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் காப்புறுதியளிக்கப்பட்ட மொத்த வியாபாரத்தில் 12 சதவீதத்தின் மூலம் அமெரிக்கா இரண்டாவது பெரிய சந்தையாகும். அதற்கு அடுத்ததாக ஐக்கிய ராஜ்ஜியம் 7 சதவீதத்தையும் ரஷ்யா 6 சதவீதத்தையும் கொண்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் ரஷ்யாவுக்கான ஏற்றுமதிகள் 134மூ அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளுக்கு ரஷ்யா ஒரு பிரதான சந்தையாகும். இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் இ.ஏ.க.கா. கூட்டுத்தாபனம் இச்சந்தையில் அதன் வியாபாரத்தை விஸ்தரித்தது.

அவுஸ்திரேலியா 5மூ பங்கினை வகித்து பிரதான ஐந்து சந்தைகளில் இடம்பிடித்துள்ளது. 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவுஸ்திரேலியாவுக்கான ஏற்றுமதிகள் 6 சதவீதத்தால் அதிகரித்தது. 1.2 பில்லியன் ரூபாவை எட்டியது. ரப்பர் கையுறை, தேயிலை, பீங்கான் பொருட்கள், தும்புக்கயிறு ஆகியவற்றின் ஏற்றுமதி இந்த அதிகரிப்புக்கு உதவியது.

| | 2014 | 2013 |
|---|---|---|
| மொத்த காப்புறுதி கட்டண வருமானம் | 194.55 | 163.36 |
| தொழிற்பாட்டு மிகை | 84.79 | 73.35 |
| தேறிய கோரிக்கைகள் | 37.81 | 30.68 |
| முதலீட்டு வருமானம் | 99.79 | 132.54 |
| மூலதனமும் ஒதுக்கீடுகளும் | 1757.92 | 1581.42 |
| தேறிய மிகை | 161.69 | 139.36 |
| வரிகளும் தீர்வைகளும் | 29.00 | 67 |




### இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் காப்பீடு

இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் வகையில் இ.ஏ.க.கா கூட்டுத்தாபனம் புதிய சந்தைகளுக்கு காப்பீட்டு வசதிகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது. ஏற்றுமதியாளர்கள் புதிய சந்தைகளுக்கு அதிக நம்பிக்கையுடன் நுழைய இந்த செயற்பாடு வழி செய்கிறது. விரிவான பகுப்பாய்வு மற்றும் மீளாய்வையடுத்து இ.ஏ.க.கா. கூட்டுத்தாபனம் அண்மையில் 11 புதிய சந்தைகளை திறந்துள்ளது. இடர் மிகுந்த ஆபிரிக்க மற்றும் ஆசிய சந்தை உள்ளிட்ட இடங்களில் இந்த காப்புறுதி காப்பீடு சந்தைகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனமானது 160 நாடுகளில் தற்போது விற்பனையாளர் இடர் காப்பீட்டுடன் கூடிய அரசியல் இடர் காப்புறுதிகளை மேற்கொள்கிறது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அரசியல் நிலவரம் ஸ்திரமற்ற நிலையில் இருந்த போதிலும் அப்பிராந்தியத்திலும் இவ்வகையான காப்புறுதி மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் நோக்கத்துடனேயே கூட்டுத்தாபனம் இந்த செயற்பாட்டை மேற்கொள்கிறது.

2014 ஆம் ஆண்டில் 8 பிராந்தியங்களில் காப்புறுதி காப்பீடு எவ்வாறு பகிரப்பட்டுள்ளது என்பதை கீழே காணலாம்.




அட்டவணையைப் பார்க்கும் போது கூட்டுத்தாபனமானது அதிக இடருடன் கூடிய ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சிறப்பான காப்பீட்டு வசதியை கொண்டுள்ளதைக் காணலாம். ஆபிரிக்க பிராந்தியத்தில் நாம் 39 நாடுகளுக்கும் ஆசியாவில் 25 நாடுகளுக்கும் கிழக்கு ஐரோப்பாவில் 24 மற்றும் மத்திய கிழக்கில் 13 நாடுகளுக்கும் காப்பீட்டு வசதிகளை வழங்குகிறோம். இடருடன் கூடிய சந்தையில் நுழைந்து நம்பிக்கையுடன் அதிக வருமானத்தை ஈட்ட இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு இதன்மூலம் வசதி கிடைக்கிறது.

### கடன் எல்லைகள்

காப்புறுதி ஒப்பந்தம் என்பது விரிவான இடர் கணிப்பீட்டு முறையாகும். இதில் இடர் மட்டத்தை கணித்தல் மற்றும் காப்புறுதிக் காப்பீட்டின் அளவு மற்றும் நிபந்தனைகளை வரையறுத்தல் ஆகியவை உள்ளடங்கும். காப்புறுதி ஒப்பந்தத்தின் நோக்கமானது இடர்களை இனங்காண்பதும் அவற்றுக்கு எதிராக காப்பீடு செய்யும் சாத்தியங்களை (அவை எந்த நிபந்தனையின் கீழ் வருகின்றன) தெரிந்துகொள்வதுமாகும்.

இடரின் மட்டத்தை இனங்காண்பதில் பல்வேறு தரப்பட்ட தகவல் வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை காப்பீடு செய்யும் தரப்பு மற்றும் குறிப்பிட்ட திட்டம் ஆகியவற்றை பொறுத்துள்ளது.

கூட்டுத்தாபனமானது விற்பனை இடர் காப்புறுதி காப்பீடு வெளிநாட்டு கொள்வனவாளர்கள் மற்றும் நாடுகளிடம் இருந்து ஏற்றுமதி வாய்ப்புகளை பெரிதும் ஏற்றுமதியாளர்கள் கடன் பெறத் தக்கவர்களாக இருப்பின் அவர்களுக்கான கடன் எல்லைக்குள் அதற்கான வசதிகளை வழங்கி ஏற்றுமதியாளர்களுக்கு தொடர்ந்தும் உதவி வருகிறது.

கடன் எல்லை என்பது ஒரு காப்புறுதிதாரர் காப்புறுதி செய்ய விழையும் அளவை குறிக்கிறது. இவை கொள்வனவாளர்களின் கடன் எல்லையாகும். இதனை காப்புறுதித்தாரர் தயார் செய்வார். இந்த கடன் எல்லை பல்வேறு காரணிகளை பொறுத்து அமையும்.

### ஏற்றுமதி கடன் உத்தரவாதங்கள்

இலங்கை ஏற்றுமதி கடன் உத்தரவாதங்களானவை ஏற்றுமதியாளர்களின் உண்மையான நிதி ஏற்பாட்டில் சம்பந்தப்படுவதில்லை. ஏற்றுமதியாளர்களுக்கான நிதியிடலின்

நட்டப் பெறுபேறுகளுக்கெதிராக ஏற்றுமதி நிதியிடல் வங்கிகளை இது பாதுகாக்கிறது. நிதி நிறுவனங்களுக்கு தேவையான ஆதரவினை வழங்குவதன் மூலம் அவர்கள் ஏற்றுமதி துறையில் நிதியிடுவதற்கு ஆர்வத்துடன் பங்கு பற்றுவதை ஊக்குவிக்கப்படுகின்றனர். கடந்த ஆண்டிலும் கப்பிலில் ஏற்றுவதற்கு முன்னரான கடன் உத்தரவாதமானது வங்கிகளுக்கிடையே மிகவும் பிரபல்யம் வாய்ந்த கடன் உத்தரவாதமாக தொடர்ந்தும் பெயர் பெற்று வருகின்றது.

### ஏ.டி.ஏ. கார்னற் முறைமை

சர்வதேச வர்த்தக மன்றம் - இலங்கைக்கான நேரடி ஏற்றுமதி செயலாளர் உத்தரவாதத்தை காப்பீடு செய்யும் ஏ.டி.ஏ. கார்னற் முமைறையை கூட்டுத்தாபனமானது தொடர்ந்தும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கி வருகிறது. குறிப்பாக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களை உள்ளடக்கும் துறையில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு ஒரே வகுதியினைச் சேர்ந்த பாதுகாப்பின்றி ஏ.டி.ஏ. கார்னற் முறைமையை பெற்றுக்கொள்ள இது வழி வகுக்கிறது.

மீளாய்வுக்கான காலப்பகுதியில் கூட்டுத்தாபனமானது 2014 ஆம் வருடத்தில் 37.51 மில்லியன் ரூபா பெறுமதியுடைய ஐஊஊ. ளுடுக்கான கேள்வி உத்தரவாதங்களை வழங்கியுள்ளது.

ஏ.டி.ஏ. கார்னற் முறைமை குறிப்பாக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுடன் ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு வெளிநாடுகளிலுள்ள வர்த்தக சந்தைகள் மற்றும் பொருட்காட்சிகளை நடத்துவதிலும் அதன்மூலம் நாட்டுக்கு மிகவும் தேவையான வெளிநாட்டு செலாவணியை பெறுவதற்கும் வழிவகுக்கிறது.

### பயணச் செலவு - அபாரா

எமது உத்தரவாதமானது விமான பயணச் செலவு மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகள் தொடர்பில் புலம் பெயர் தொழிலாளர்களினால் எதிர்நோக்கப்படும் சில இடர்பாடுகளை நீக்குவதன் நோக்கமாக கொண்டதுடன் இத்துறைக்கு வசதிகளை வழங்குவதில் வங்கிகளுக்குள்ள இடர்பாடுகளை தணிக்கும் பொருட்டு வழங்கப்படுகிறது.

மீளாய்வு காலப்பகுதியில் இலங்கை ஏற்றுமதிக் கடன், காப்புறுதி கூட்டுத்தாபனமானது 138.34 மில்லியன் ரூபா பெறுமதியான கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு 1032 விண்ணப்பதாரிகளுக்கு உதவியளித்துள்ளதுடன் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள இலங்கையர்களுக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அபாரா திட்டமானது வறுமையை ஒழிக்கும் நோக்கில் வெளிநாட்டில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான குறிக்கோளாகக் கொண்ட ஆர்வமுள்ள நாட்டின் பிரஜைகளுக்கு வழங்கப்படுகின்றது. இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனமானது வெளிநாட்டு அனுப்புதல்களினை விரிவாக்குவதன் மூலம் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கான பங்களிப்பினை வழங்குவதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான இத்தகைய உதவிகளை மகிழ்ச்சியுடன் வழங்கி வருகின்றதுடன் வெளிநாட்டு செலாவணியையும் இதன்மூலம் அதிகரித்துக் கொள்ள முடியும். அத்துடன் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்காக செல்லும் பெண்களுக்கான சமூக மற்றும் குடும்ப ரீதியிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் உதவுகிறது.

### சர்வதேச உறவுகள

உலகமயமாக்கலைப் பொறுத்தவரை பொருளாதார சந்தைத் தளங்களின் வர்த்தக அமைவுகள் அவர்களது சகபாடிகளின் சுறுசுறுப்பான, சக உதவியுடனான செல்வாக்கின் கீழ் அமைந்துள்ளன. சர்வதேச சந்தை மாற்றங்களை சமாளிப்பதற்கு உள்ளூர் வர்த்தக சங்கங்கள் மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி கடன் முகவர்கள் ஆகியோர் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் வைத்துள்ள பரிமாறல் மற்றும் கூட்டுறவு வளர்த்து வருவதுடன், அதற்கான தொடர்புகள் மற்றும் தொலைத் தொடர்புகள் ஆகியவற்றுடன் ஏற்றுமதியாளர்கள் தாம் வர்த்தகத்தை மேற்கொள்ளும் நாடுகள் மற்றும் கொள்வனவாளர் தொடர்பான இடர்களை நிர்வகிக்கவும் உதவகிறது.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனமானது கடன் மற்றும் முதலீட்டு காப்புறுத்தாரர், சர்வதேச சங்கத்தில் (பேர்ன் சங்கம்) அங்கத்துவம் பெற்றுள்ளது. மேற்படி சங்கம் ஏற்றுமதி கடன் மற்றும் முதலீட்டு காப்புறுதி கைத்தொழில் துறையில் உள்ள முன்னணி சர்வதேச சங்கமாகும். குறிப்பிட்ட பேர்ன் சங்கத்தின் அங்கத்தவர்கள் உலகின் குறுக்கு எல்லை வர்த்தகத்தில் 10மூ காப்பீடு செய்கின்றனர்.

பேர்ன் சங்கத்தின் செயற்பாடுகளில் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் சுறுசுறுப்பாக பங்குபற்றுகிறது. பேர்ன் சங்கத்தின் முகாமைத்துவ கமிட்டிக்கு தெரிவாகியுள்ள கூட்டுத்தாபனம் 2 வருட காலத்துக்கு சுழற்சி அங்கத்தவராகும். இதனால் 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பேர்ன் சங்கத்தின் அனைத்து கூட்டங்களிலும் கூட்டுத்தாபனம் கலந்து கொண்டுள்ளது. அத்துடன் லண்டனில் நடைபெற்ற சங்கத்தின் வசந்த கால கூட்டம் மற்றும் வருடாந்த பொதுக் கூட்டத்திலும் கூட்டுத்தாபனம் கலந்து கொண்டது.



இந்த கூட்டங்களின்போது அங்கத்தவர்கள் சர்வதேச வர்த்தகம் தொடர்பான பல்வேறு அம்சங்கள் தொடர்பாக தொழில்சார் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர். அத்துடன் காப்புறுதி தொடர்பான குறிப்பிட்ட கைத்தொழில்துறைகள் மற்றும் நாடுகள் பற்றிய தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

பிராந்திய கூட்டுறவு குழு (சுஊபு) என்பது பேர்ன் சங்கத்தில் உள்ள 12 அங்கத்துவ நிறுவனங்களின் அமைப்பாகும். பேர்ன் சங்கத்தின் ஆசிய பிராந்திய அங்கத்தவர்களிடையே, சர்வதேச உறவுகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பிராந்திய கூட்டுறவு குழுவில் அவுஸ்திரேலியா, இந்தியா, சீனா, இந்தோனேசியா, ஜப்பான், மலேஷியா, சிங்கப்பூர், இலங்கை, தென்கொரியா, தைவான், தாய்லாந்து மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளின் ஆசிய ஏற்றுமதி கடன் முகவர்கள் உள்ளடங்குகின்றனர்.

பேர்ன் சங்கத்தின் கூட்டங்களுக்கு சமாந்திரமாக நடைபெற்ற சுஊபு கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு புறம்பாக கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் 2014 ஜூலை மாதத்தில் ஹொங்கொங்கில் நடைபெற்ற ஏழாவது பிரதம நிறைவேற்று அதிகாரிகள் கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்ட அங்கத்தவர்கள் கடன்

காப்புறுதி சந்தையை பாதிக்கும் நடப்பு உலக 'விகாரங்களின் முக்கிய அம்சங்கள் மற்றும் பொது அக்கறையுடனான விடயங்கள்' றி கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.




**ஆசிய கடன் இணை நிறுவனங்களின் கூட்டமைப்பில் (ACSIC) சேர்த்துக் கொள்ளல்**

ஆசிய கடன் இணை நிறுவனங்களின் கூட்டமைப்பு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் ஆசிய கூட்டுறவு அமைப்பாகும். 11 நாடுகளில் இருந்து 16 அங்கத்துவ நிறுவனங்கள் இதில் உள்ளன.

ஆசிய கடன் இணை நிறுவனங்களின் குறிக்கோள்

ஆசிய பிராந்தியத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கடன் இணை முறைமையை அபிவிருத்தி செய்வதாகும். ஆசியாவில் உள்ள சிறிய விற்பனையில் ஈடுபடும் இணை நிறுவனங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம், கலந்துரையாடல் மற்றும் ஆளணியினரை மாற்றிக்கொள்ளல் மூலம் இவ்வாறான அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையை பொறுத்தவரை சிறய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையில் அனைத்து கைத்தொழில் துறைகளையும் சேர்ந்த நிறுவனங்களில் 80மூ நிறுவனங்கள் அடங்குகின்றன. சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உள்ள பிரச்சினை கடன் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதாகும்.

இவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் தருவதற்கு வங்கிகள் தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. இதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. பிணை கிடைக்காமை, முறைப்படி அமையாமை மற்றும் சிறிய அளவு ஆகியவை இதில் சில காரணிகளாகும். இந்நிலையில், கடன் உறுதி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை வங்கிகளின் இடர்களை பகிர்ந்து கொள்கின்றன. இதன்மூலம் அவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் கிடைப்பதற்கு வழி ஏற்படுகிறது.

இவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவும் நோக்கில் இலங்கை ஏற்றுமதிக்கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் இந்த கூட்டமைப்பில் (யுஊளுஐஊ) அங்கத்துவம் பெற 2014 ஏப்ரலில் விண்ணப்பித்தது. மலேஷியாவில் நவம்பர் மாதம் நடைபெற்ற வருடாந்த பிரதம பேராளர்கள் கூட்டத்தில் எமது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சங்கத்தின் பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டது.

மலேஷியாவின் கோலாம்பூரில் 2014 நவம்பர் 16 ஆம் திகதி முதல் 19ம் திகதி வரை நடைபெற்ற ஆசிய கடன் இணை நிறுவனங்கள் கூட்டமைப்பின் 27 ஆவது மாநாட்டில் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் சார்பாக அதன் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான டி.பி.மென்டிஸ் மற்றும் டி.பி. அளுத்கே(உதவி பொது முகாமையாளர் - நிதி ) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஆசியன் எக்ஸிம் வங்கிகள் மன்றத்துடன் பிணைப்பு**

ஆசியன் எக்ஸிம் வங்கி மன்றம் (AEBF) ஆசிய ஏற்றுமதி கடன் முகவர்களுக்காக இந்தியாவின் எக்ஸிம் வங்கியினால் 1986 இல் ஆரம்பிக்கப்பட்டது. அங்கத்துவ நிறுவனங்களிடையே பிராந்திய கூட்டுறவை அபிவிருத்தி செய்யவும் மேம்படுத்தவும், கட்டமைப்பான முறையில் தகவல் மற்றும் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும் இந்த மன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆசியன் எக்ஸிம் வங்கி மன்றமானது எவ்வித அங்கத்துவ கட்டணமும் வேறு கடப்பாடுகளும் இல்லாத தன்னிச்சையான விதிமுறை சாராத குழு அமைப்பாகும். ஆசியன் எக்ஸிம் வங்கி மன்றத்தில் அவுஸ்திரேலியா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் வியட்னாம் ஆகிய நாடுகளில் உள்ள பத்து நிரந்தர அங்கத்துவ நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தக் குழுவில் 1999 முதல் நிரந்தர பார்வையாளர் அந்தஸ்துடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.

2014 மார்ச் மாதம் 9 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை புதுடில்லியில் இடம்பெற்ற ஆசியன் எக்ஸிம் வங்கிகள் மன்றத்தின் 20ஆவது தொழில்நுட்ப செயற்பாட்டு குழு கூட்டத்தில் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் கலந்து கொண்டார். அத்துடன் அவர் அங்கு மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு நிகழ்ச்சியொன்றையும் நடத்திக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கூட்டத்தில் நாம் கலந்து கொண்டதன் பயனை உடனடியாகவே காண முடிந்தது. ஆசியன் எக்ஸிம் வங்கிகள் மன்றத்தின் அங்கத்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கொள்திறனை கட்டியெழுப்பும் திட்டத்துக்கு கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்க ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவி கிடைத்தது மேற்படி கூட்டத்தில் நாம் பங்குபற்றியதன் காரணமாகவேயாகும்.

| வகையீடு | 01.01.14 இல் சொத்தின் கிரயம் ரூ. | 01.01.14 இல் மீள் மதிப்பீட்டில் சொத்துக்கள் ரூ. | சேர்க்கைகள் 2014 ரூ. | விற்பனைகள் 2014 ரூ. | 31.12.2014 இல் தேறிய பெறுமதி ரூ. | 01.01.14 இல் தேய்மானம் ரூ. | தேய்மானம் 2014 ரூ. | 31.12.2014 இல் திரண்ட தேய்மானம் ரூ. | 31.12.2014 இல் பதிலளிக்கப்பட்ட பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டிடங்கள் | 0.00 | 95,000,000.00 | 0.00 | 0.00 | 95,000,000.00 | 19,000,000.00 | 4,750,000.00 | 23,750,000.00 | 71,250,000.00 |
| மோட்டார் வாகனங்க | 0.00 | 6,855,000.00 | 0.00 | 0.00 | 6,855,000.00 | 6,854,996.00 | 0.00 | 6,854,996.00 | 4.00 |
| மோட்டார் வாகனங்க | 3,573,023.49 | 0.00 | 8,808,552.00 | 0.00 | 12,381,575.49 | 3,389,481.49 | 71,048.00 | 3,460,529.49 | 8,921,046.00 |
| மென் பொருள் | 5,522,054.73 | 0.00 | 523,395.05 | 0.00 | 6,045,449.78 | 5,522,045.73 | 0.00 | 5,522,045.73 | 523,404.05 |
| கணனிகள் மற்றும் | 5,766,251.54 | 0.00 | 145,900.00 | 0.00 | 5,912,151.54 | 1,791,047.54 | 1,213,175.00 | 3,004,222.54 | 2,907,929.00 |
| பிரின்டர்கள் | 0.00 | 2,498,666.67 | 0.00 | 0.00 | 2,498,666.67 | 2,498,638.67 | 0.00 | 2,498,638.67 | 28.00 |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 8,204,272.28 | 0.00 | 0.00 | 0.00 | 8,204,272.28 | 5,391,798.53 | 397,207.63 | 5,789,006.16 | 2,415,266.12 |
| அலுவலக | 761,357.37 | 0.00 | 18,691.50 | 0.00 | 780,048.87 | 366,039.83 | 158,868.60 | 524,908.43 | 255,140.44 |
| உபகரணம் | 0.00 | 637,250.00 | 0.00 | 0.00 | 637,250.00 | 637,220.00 | 0.00 | 637,220.00 | 30.00 |
| **மொத்தம்** | **23,826,959.41** | **104,990,916.67** | **9,496,538.55** | **0.00** | **138,314,414.63** | **45,451,267.79** | **6,590,299.23** | **52,041,567.02** | **86,272,847.61** |

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்
## வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2014
## 2014 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு | | 31.12.2014 | 31.12.2013 | 01.01.2013 |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 19 | **சில்லறை கடன் கொடுத்தோர்கள், சேர்ந்த செலவுகள் மற்றும் ஏற்பாடுகள்** | | | |
| | **சில்லறை கடன் கொடுத்தோர்கள்** | | | |
| | கொடுக்க வேண்டிய இறுதிக் கொடுப்பனவு | 18,176.46 | 18,176.46 | 18,176.46 |
| | பொது வரி(காப்புறுதி கட்டணத்தில் அறவிடப்பட்டது) | 30,594.00 | 62,614.12 | 84,554.07 |
| | பதவியினர் மருத்துவ நிதியம் | 303,408.00 | 283,188.00 | 266,688.00 |
| | மீளளிக்கத்தக்க வைப்புக்கள் | 1,444,756.12 | 1,153,656.12 | 1,772,606.12 |
| | **சேர்ந்த செலவுகள்** | | | |
| | ஊழியர் சேம லாப நிதியம் | 1,192,944.99 | 839,651.50 | 697,007.53 |
| | ஊழியர் சேநம்பிக்கை நிதியம் | 99,412.00 | 69,970.95 | 58,083.92 |
| | சம்பள அறவீடு | 2,044.00 | 5,738.00 | 0.00 |
| | உ.போ.செ.வரி | 213,187.00 | 23,237.00 | 242,572.00 |
| | முத்திரை ; தீர்வை | 15,300.00 | 12,625.00 | 11,100.00 |
| | தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 32,465.00 | 15,642.00 | 20,244.00 |
| | ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 3,062,219.88 | 2,903,455.73 | 2,774,508.10 |
| | நிலையா அறிக்கைகள் மீதான கட்டணங்கள் | 335,520.00 | 828,021.75 | 1,326,750.71 |
| | **ஏற்பாடுகள்** | | | |
| | செலுத்தத்தக்க கணக்காய்வு கட்டணங்கள் | 1,755,570.92 | 1,515,666.92 | 1,813,835.00 |
| | செலுத்தத்தக்க வருமான வரி | 3,241,916.12 | 9,759,674.69 | 5,244,109.25 |
| | நிதிச்சேவைகள் மீதான பெ.சே.வரி | 7,042,685.00 | 4,038,954.00 | 4,200,049.00 |
| | வருடாந்த அறிக்கை அச்சிடல் செலவு | 900,000.00 | 700,000.00 | 737,250.00 |
| | | 19,690,199.49 | 22,230,272.24 | 19,267,534.16 |
| 20 | **செலுத்தத்தக்க பணிக்கொடை** | | | |
| | கணக்கிலுள்ளுள்ள நகர்கர்வு | | | |
| | ஜனவரி 1இல் உள்ள மீதி | 8,651,512.75 | 7,314,985.75 | 8,471,874.75 |
| | குறித்த ஆண்டில் செலுத்தப்பட்டவை | 602,904.14 | 1,386,965.50 | 1,811,367.00 |
| | ஆண்டுக்கான ஏற்பாடு | 2,432,309.14 | 2,723,492.50 | 654,478.00 |
| | டிசம்பர் 31 இல் உள்ள மீதி | 10,480,917.75 | 8,651,512.75 | 7,314,985.75 |
| 21 | **ஈடுபடுத்திய மூலதனம்** | | | |
| | பங்களிப்பு செய்த மூலதனம் - திறைசேரி | 30,000,000.00 | 30,000,000.00 | 30,000,000.00 |

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்
## வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2014
## 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கல்கள்

| | பொது ஒதுக்கம் ரூபா | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா | முதலீட்டு நிதி ரூபா | பரிமாற்று சமநிலை ரூபா | தொழில்நுட்ப மாற்றீடு ரூபா | ஈட்டப்படாத காப்புறுதி ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,228,144,122.50 | 48,376,282.86 | 34,464,501.05 | 44,549,129.91 | 2,170,141.80 | 0.00 | 1,357,704,178.12 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து மாற்றல் | 6,680,897.61 | -6,680,896.51 | | | | | 1.10 |
| 2013 ஆம் ஆண்டுக்கான தேறிய லாபம் | 139,368,314.29 | | | | | | 139,368,314.29 |
| அலுவலக உபகரணம் மீதானமீள் மதிப்பீட்டு மிகை குறித்த ஆண்டில் மாற்றப்பட்டவை | | | 24,043,448.00 | 10,118,044.01 | 2,042,112.08 | 18,147,984.71 | 54,351,588.80 |
| 2013 டிசம்பர் 31 இல் உள்ள மீதி | **1,374,193,334.40** | **41,695,386.35** | **58,507,949.05** | **54,667,173.92** | **4,212,253.88** | **18,147,984.71** | **1,551,424,082.31** |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து மாற்றம் | 4,755,000.00 | -4,755,000.00 | | | | | 0.00 |
| 2014 ஆம் ஆண்டுக்கான தெறிய லா ன தேறிய லாபம் | 161,692,640.66 | | | | | | 161,692,640.66 |
| 2014 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டவை ாற்றப்பட்டவை | | | 0.00 | 136,685.61 | 2,431,938.16 | 12,243,223.15 | 14,811,846.92 |
| 2014 டிசம்பர் 31 இல் உள்ள மீதி | **1,540,640,975.06** | **36,940,386.35** | **58,507,949.05** | **54,803,859.53** | **6,644,192.04** | **30,391,207.86** | **1,727,928,569.89** |

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

## வருடாந்த நிதிக்கூற்றுக்கள் – 2014

## 2014 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 23 நாணய மாற்று வீதம்

பின்வரும் நாணயமாற்று வீதங்கள் 2014 டிசம்பர் இறுதியிலுள்ளவாறான வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களில் பயப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அமெ. டொலர் | - 130.36 |
| யூரோ | - 157.92 |

### 24 அலுவலக உபகரணங்களின் மீள் மதிப்பீட்டினை வெளிப்படுத்துதல்

1. மீள்பெறுமதி மதிப்பீட்டின் பயன்வலுத் திகதி

| | |
|---|---|
| கட்டிடம் | - 31.12.2009 |
| மோட்டார் வாகனங்கள் | - 31.12.2008 |
| கணனியும் பிரின்டர்களும் | - 01.01.2010 |
| அலுவலக உபகரணங்கள் | - 01.01.2010 |

2. பெறுமதி மதிப்பீடானது விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால்
மேற்கொள்ளப்பட்டது

3. பெறுமதி மதிப்பீடானது பெறுமதியில் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன்
தொடர்புடைய அனைத்து காரணிகளையும் கவனத்தில் கொண்டதன்
பின்னர் பரிசோதனைகள் மற்றும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டதன்
பின்னர் முடிந்த வரை மிகச் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது

4. மீள் பெறுமதியின் மூலமாக பெறப்பட்ட பெறுமதியானது நடைமுறை சந்தை விலையாக இருக்கும்.

5. கிரய மாதிரியின் கீழ் மீள் பெறுமதியிடப்பட்ட சொத்துக்கள் கொண்டிருக்கும் பெறுமதி

| | |
|---|---|
| கட்டிட ம் | - ரூ. 18,715,846.∴ |
| மோட்டார் வாகனங்கள் | - ரூ. 5.00 |
| கணனிகளும் பிரின்டர்களும் | - ரூ. 28.00 |
| அலுவலக உபகரணங்கள் | - ரூ 30.00 |

### 25 எதிர்பாராத பொறுப்புக்கள்

அ) கூட்டுத்தாபனத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்
(1) வரை. சதேர்ன் சண் டீஸ் (கூட்டுத்தாபனத்துக்கு எதிராக - ர்.ஊ (சிவில்) 193.∴2004 (ஐ))

கோரிக்கையொன்று நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஏற்றுமதியாளர் ஒருவரினால் வழக்கு தாக்கல்
செய்யப்பட்டுள்ளதுடன் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் ரூபா 17.02மில்லியன் கோரி தாக்கல் செய்யப்பட்டது.

தற்போதைய நிலை - மேன் முறையீடானது வழக்குக்கு எடுக்கப்படும் திகதி
நிர்ணயிக்கப்பட்டுள்ளது

(2)பி.என்.எச்.ஆர். சில்வா எதிர் இ.ஏ.க.கா.கூ -தொ.ம. வழக்கு இல. 25.∴2014
தொழிலை விட்டு விலக்கியமைக்காக. இ.ஏ.க.கா.கூ. ஊழியர் ஒருவர்
மீண்டும் வேலை, இழக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஏனைய நலன்களை
கேட்டு கூட்டுத்தாபனத்துக்கு எதிராக தொழில் மன்றில் வழக்கொன்றை
தாக்கல் செய்துள்ளார்.
ற்போதைய நிலை – வழக்கு விசாரணையில் உள்ளது

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

2014 .12.31 இல் உள்ளவாறு நடைமுறையிலுள்ள காப்புறுதி பூட்கைகள் மற்றும்
உத்தரவாதங்களின் பெறுமதி

| | |
|---|---|
| உத்தரவாதங்கள் | ரூ. 1,769,351,324.∴- |
| காப்புறுதி பூட்கைகள் | ரூ. 17,306,000,000.∴- |

### 26. முதலீட்டு நிதி கணக்கு

இலங்கை வங்கியில் கணக்கொன்றினைத் திறப்பதன் மூலம் முதலீட்டு நிதிக் கணக்கொன்று
தாபிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தானமானது கடன் வழங்கல் நடவடிக்கையில் ஈடுபடாமையினால்
குறித்த கணக்கில் உள்ள நிதிகளைப் பயன்படுத்தும் நோக்குடன் 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட
முதிர்வு காலத்தினைக் கொண்ட நீண்ட கால திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யவுள்ளது. ஆனால்
இதுவரையில் அமையப் பெறாமையினால் அத்தகைய நிதிகளை
இன்னமும் கூட்டுத்தாபனம் முதலீடு செய்யவில்லை

### 27. தொடர்புடைய தரப்பின் வட்டிகள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் தொடர்புடைய தரப்பு முதலீடுகள் எதுவும் இடம் பெறவில்லை

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## பொதுவான தகவல்

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுடன் 1979 பெப்ரவரி 8ஆம் திகதி வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்தது

### முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் தொகுப்பு

இத்தகைய நிதிக் கூற்றுக்களில் பிரயோகிக்கப்படும் பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே தரப்படுகின்றன.

### 01. தயாரிப்பு அடிப்படை

1.1 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாட்டின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகள் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏற்றுமதி வர்த்தகத்திலுள்ள இடர்களைப் பொறுப்பேற்பதும் உத்தரவாதங்களை வழங்குவதுமேயாகும்.

1.2. கணிப்பீட்டு அடிப்படை

2014 டிசம்பர் 31 இலுள்ளவாறானதும் ஆண்டு இறுதியிலுள்ளதுமான கூட்டுத்தாபனத்தின் உரிமையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற ஐந்தொகை, வருமான மற்றும் செலவினக் கணக்கு என்பனவும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடனான காசுப்பாய்ச்சல்களும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியுள்ளன. இத்தகைய நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற பணவீக்க காரணிகளுக்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வரலாற்று கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2. மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்களின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது, கொள்கைகளின் பிரயோக தாக்கம் குறித்து தீர்ப்புக்கள் மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களை மேற்கொள்ளுதல் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் குறித்து முகாமை செய்வதற்கு தேவைப்படுகின்ற இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக மேற்கொள்ளப்படுகின்றன. மதிப்பீடுகளும் அதனுடன்
தொடர்புடைய கருதுகோள்களும் வரலாற்று அடிப்படையிலும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானவையென நம்பப்படுகின்றன ஏனைய பல்வேறு காரணிகளினையும் அடிப்படையாகக் கொள்கின்றன. மதிப்பீடுகளும் அது தொடர்பான கருதுகோள்களும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீளாய்வுகள் அக்காலப்பகுதியில் மாத்திரம் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற மீளாய்வு அல்லது மீளாய்வு காலப்பகுதியிலாயின், மீளாய்வானது நடைமுறை மற்றும் எதிர்கால காலப்பகுதிகளில் பாதிப்பினை ஏற்படுத்துமாயின் மீளாய்வு செய்யப்படுகின்ற மதிப்பீட்டு காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

1.3 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும் போது, எதிர்காலத்தில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தாபனமானது தொடர்ந்து செல்லும் நிறுவனத்தின் பொறுப்பினை மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம். எதிர்காலம் தொடர்பில் கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களையும் கருத்தில் கொண்டு கலைப்புச் செய்வதற்கோ அல்லது வியாபாரத்தினை இடைநிறுத்துவதற்கோ தேவை ஏற்படுமென நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை.

### 02. ஒப்பீட்டு ரீதியான தகவல்

கணக்கீட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபனத்தினால் நிலையாக பிரயோகிக்கப்படுவதுடன் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவையே தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றன.

### 03. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இத்தகைய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிகளிலும் நிலையாக பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்றன.

3.1. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணய வடிவில் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்கையில் மாற்றுவீதமானது கொடுக்கல் வாங்கலானது இடம்பெற்ற மாத இறுதியில் காணப்பட்ட வீதத்திற்கு ஏற்புடையதாகும். வெளிநாட்டு நாணய மாற்று வித்தியாசங்கள் வருமான செலவினை கூற்றிலுள்ள கணக்கிற்கு கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வெளிநாட்டு நாணய வடிவங்களிலான அனைத்து நாணய சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகை திகதியில் அத்திகதியிலுள்ளவாறான ஏற்புடைய வீதத்தில் இலங்கைக்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களின் கீழ் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நடவடிக்கைகளினால் ஏற்படும் இலாபங்களும் நட்டங்களும் ஐந்தொகையில் நாணயமாற்று வீத சமநிலைப்படுத்தும் ஒதுக்கத்திற்கு தனித்தனியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

3.2. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்
அ) அங்கீகாரமும் அளவிடலும்

காணி தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன கிரயத்திலும் திரண்ட தேய்மானத்திலும் மற்றும் திரண்ட தொழிற்படாத நட்டங்களிலும் கணிப்பீடு செய்யப்படுகின்றன. கிரயமானது சொத்தினைக் கொள்வனவு செய்வதில் நேரடியாக ஏற்படுகின்ற செலவினத்தை உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயமானது மூலப்பொருட்கள் நேரடியான கூலி, அவற்றின் பயன்பாட்டுக்காக தொழிற்படு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பட்ட ஏனைய நேரடியான செலவுகள் மற்றும் அவை அமையப் பெறவுள்ள அமைவிடத்தில் பொருட்களை பகுதியாக்குதல், அகற்றுதல் மற்றும் மீளமைத்தலுக்காக ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்குகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

என்பன வெவ்வெறுபட்ட பயன்பாட்டுக் காலத்தினைக் கொண்டுள்ள பிரதான கூறுகளாகவிருப்பதால் அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வெவ்வேறான வகையீடாக கணக்குகளில் சேர்க்கப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் விற்பனை மூலமான இலாபம் அல்லது நட்டமானது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன கொண்டிருக்கின்ற பெறுமதியிலிருந்தான சம்பாதியங்களை ஒப்பீடு செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றதுடன் வருமான கூற்றில் தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் இனுள் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆ) தேய்மானம்

தேய்மான ஏற்பாடானது, இறையிலாதனம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் எஞ்சிய தொகையின் கிரயத்தில் அல்லது மீள் மதிப்பிடப்பட்ட தொகையில் நேர்கொட்டு முறையினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்றது. பயன்படுத்தப்படுகின்ற பிரதான வருடாந்த வரி வீதங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | கட்டிடம் | 5மூ |
| 2. | அலுவலக உபகரணம் | 25மூ |
| 3. | மோட்டார் வாகனங்கள் | 20மூ |
| 4. | தளபாடங்களும் பொருத்துக்களும் | 10மூ |

சொத்துக்களின் மீது அறவிடப்படுகின்ற தேசிய வரலாற்று கிரய தேய்மானத்திற்கெதிராக மீள் பெறுமதியிடப்பட்ட சொத்துக்களின் மீது அறவிடப்படும் வருடாந்த தேய்மானத்திற்கான மிகைக்கு சமமான தொகையானது மீள் பெறுமதியிடலிலுள்ள தொகையிலிருந்து திரண்ட இலாபத்திற்கு மாற்றப்படுகின்றது. அச்சொத்து கொண்டிருக்கின்ற பெறுமதியானது அதன் மதிப்பீடு செய்யப்பட்ட அறவிடத்தக்க தொகையினைக் காட்டிலும் அதிகமாக காணப்படின் அதன் அறவிடத்தக்க தொகையானது உடனடியாக பதவளிப்பு செய்யப்படுகின்றது.

இ) விற்பனை

வைத்திருக்கின்ற தொகையுடன் சம்பாத்தியங்களை ஒப்பீடு செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன விற்பனை மீதான இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றிலுள்ள தொழிற்பாட்டு இலாபம் அல்லது நட்டத்தினைத் தீர்மானிப்பதனை அங்கீகரிக்கின்றன. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்படும் போது மீள் மதிப்பீட்டு தொகையில் உள்ளடக்குகின்ற தொகையானது நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்களுக்கு மாற்றப்படுகின்றன.

ஈ) தொழிற்படா நிலை

கொண்டிருக்கின்ற பெறுமதியினை குறிப்பிடுகின்ற சந்தர்ப்பங்களில் நிகழுகின்ற நிகழ்வுகள் அல்லது மாற்றங்களின் போது அறவிடத்தக்க அல்லாததாகும். தற்போதிருக்கும் அத்தகைய குறிப்பீடு எனில் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட அறவிடத்தக்க தொகையினை விஞ்சுகின்ற பெறுமதியினை கொண்டிருக்குமிடத்து அவற்றின் அறவிடத்தக்க தொகைக்கு பதிவளிப்புச் செய்யப்படுகின்றன. தொழிற்படாத நிலையிலான நட்டங்கள் அதே சொத்துக்கான முன்னைய மீள் மதிப்பீட்டு மிகையினை மீளளிப்புச் செய்தால் மட்டுமே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

உ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான இலாபம்.'. நட்டம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டு நிறைவுக்காலம் அல்லது விற்பனையின் மீதான ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் விற்பனை நிகழுகின்ற காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் ஏனைய தொழிற்பாட்டு வருமானமாக வகைப்படுத்தப்படுகின்றன.

3.4 மூலதன குறைவேலை

ஐந்தொகை திகதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத குறித்த ஆண்டுகாலப்பகுதியில் ஏற்பட்ட மூலதன செலவுகள் முற்பணக் கொடுப்பனவாகக் காட்டப்படுவதுடன் குறித்த ஆண்டு காலப்பகுதியில் மூலதன சொத்துக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றிற்கு பயன்பாட்டுக்காக மாற்றப்பட்டுள்ளது.

3.5 கற்பனைச் சொத்துக்கள்

போதுமான பயன்பாட்டுக் காலத்தினைக் கொண்டுள்ள கூட்டுத்தாபனத்தினால் கொள்ளல் செய்யப்படும் கற்பனைச் சொத்துக்கள் திரண்ட பெறுமதி குறைவு மற்றும் திரண்ட தொழிற்படா நட்டங்களினைக் கழித்த கிரயத்தில் கணிப்பிடப்படுகின்றன. கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்களின் பேணுதலுடன் தொடர்புடைய செலவுகள் அவை ஏற்பட்டவாறே செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படும் அடையாளங் காணத்தக்க தனித்துவம் வாய்ந்த மென்பொருள் உற்பத்திகளின் வடிவமைப்பு மற்றும் சோதனையிடலுக்கு நேரடியாக ஏற்படக்கூடிய அபிவிருத்தி செலவுகள் கற்பனைச் சொத்துக்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

அ) அடிப்படை அங்கீகாரம்

கற்பசைன் சொத்தானது, சொத்துக்களுக்கு கிடைக்கக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் உரிமைக்கு பாய்ச்சலினை ஏற்படுத்தக் கூடியதான சாத்தியப்பாட்டினைக் கொண்டிருக்குமாயின் கிரயமானது உண்மைத் தன்மையினை அளவிடக்கூடியதாகக் காணப்படின் திரண்ட பெறுமதி குறைவு மற்றும் திரண்ட தொழிற்படா நட்டங்கள் கழிக்கப்பட்ட கிரயத்தில் கணக்கில் சேர்க்கப்பட்டிருப்பின் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆ) தொடர்ந்து வரும் செலவினம்

தொடர்ந்து வரும் செலவினமானது அதனுடன் தொடர்புடைய விசேட சொத்துக்களின் எதிர்கால பொருளாதார பயன்களை அதிகரிக்கும் போது மாத்திரம் முதலாக்கப்படுகின்றது. நன்மதிப்பு மற்றும் பண்டக்குறிகளின் உள்ளக பிறப்பாக்கத்தின் மீதான செலவினம் உள்ளடங்கலான ஏனைய அனைத்து செலவினங்களும் ஏற்பட்டவாறு வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இ) பயன்பாட்டிற்குதவாமை அல்லது விற்பனை

கற்பனைச் சொத்தானது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதார ரீதியான பயன் கிடைக்காத போது விற்பனையின் மீது அங்கீகரிக்கப்படுவதில்லை.

ஈ) பெறுமதி குறைவு

பெறுமதி குறைவானது கற்பனைச் சொத்துக்கள் அவை பயன்படுத்தப்படக்கூடிய திகதியிலிருந்து மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு காலத்திற்கு மேல் நேர் கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

உ) தொழிற்படாத நிலை
கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் கொண்டிருக்கின்ற தொகையானது தொழிற்படாத நிலை குறித்து ஏதேனும் குறிப்பீடு காணப்படுமிடத்து அவற்றினை தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு ஐந்தொகை திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகை குறிப்பு ஏதேனும் காணப்படுமாயின் சொத்தின் அறவிடத்தக்க தொகையானது மதிப்பீடு செய்யப்படுகின்றது. சொத்தொன்றின் பெறுமதியானது அல்லது அதன் காசு பிறப்பாக்கும் அலகானது அதன் அறவிடத்தக்க தொகையினை விஞ்சுகின்ற போதெல்லாம் தொழிற்படா நட்டமானது அங்கீகரிக்கப்படுகின்றது. தொழிற்படா நட்டமானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.6 முதலீட்டு ஆதனங்கள்

நீண்டகால வருமான மீட்டலுக்காக அல்லது மூலதன பெறுமதி சேர்ப்புக்காக வைத்திருக்கப்படும் ஆதனம் முதலீட்டு ஆதனமென வகைப்படுத்தப்படுகின்றது. முதலீட்டு ஆதனமானது பங்குகள் மற்றும் தொகுதிக்கடன்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளைக் கொண்டுள்ளது. ஆரம்பகட்ட அங்கீகாரத்தின் பின்னர், முதலீட்டு ஆதனமானது கிரயத்தில் வைத்திருக்கப்படுகின்றது.

3.7. குறுகிய கால முதலீடுகள்

அ) உள்நாட்டு நாணயத்தில் குறுகிய கால முதலீடுகள்

கூட்டுத்தாபனமானது, அரசாங்கத்தில் குறுகிய கால மிகை நிதியங்களை ஏற்படுத்தியுள்ளது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வருமான முதலீடுகள் கிரயத்தில் கணக்குகளுக்கு சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய முதலீடுகள் மீதான சேர்ந்த செலவுகள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆ) வெளிநாட்டு நாணயங்களில் குறுகிய கால முதலீடுகள்

வெளிநாட்டு நாணயங்களில் எதிர்கால கோரிக்கை கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் சம்பாதிக்கப்படுகின்ற வட்டியானது வெளிநாட்டு கணக்கில் வைப்பிலிடப்படுகின்றன. சேர்ந்த வட்டிகள் கொடுக்கல் வாங்கல் திகதியிலுள்ள வீதத்தில் மாற்றப்பட்ட வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளின் பெறுமதியானது ஐந்தொகையில் தற்போதுள்ள வீதத்தில் மாற்றப்படுகின்றன.

3.7.1 நிதி முதலீடுகளினால் ஏற்படக்கூடிய இடர்கள்
குறுகிய மற்றும் நீண்ட கால முதலீடுகளானவை திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள். அரச வங்கிகளில் நிலையான வைப்புக்கள், மற்றும் கடனீட்டு பத்திரங்கள் ஆகும். இவை வட்டி விகித இடர், மீள் முதலீட்டு இடர், தவணை தவறும் இடர், மற்றும் காலாவதி இடர் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடும். நிலையான வைப்புக்கள் அதன் முதிர்ச்சி வரை கொண்டு செல்லப்படுவதால் அது தவணை தவறும் இடர் மற்றும் காலாவதி இடர்களை மட்டுமே ஏற்படுத்த முடியும். அத்துடன் வெளி நாட்டு நாணயத்தில் இடம் பெறும் நிலையான வைப்புக்கள் நாணய மாற்று விகித மாற்றங்களால் இடர் ஏற்படுத்துகின்றன. அதற்கு மேலதிகமாக உள்ளூர் நாணய நிலையான வைப்புக்கள் மற்றும் இடர்களை ஏற்படுத்தலாம். அரச வங்கிகளில் இவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளும்போது மேற்கூறிய அனைத்து இடர்களும் குறைந்த அளவிலேயே உள்ளன. வெளி நாட்டு நாணய மாற்று விகிதம் தவிர்ந்த ஏனைய அனைத்து இடர்களும் குறைந்த அளவிலேயே உள்ளன

3.8 வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்

வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் தேறுவதற்கு மதிப்பிடப்பட்ட தொகையில் கூறப்பட்டுள்ளன. மூன்று வருடத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியில் நிலுவையாக காணப்படுகின்ற அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.9 கையிருப்புகள்

சரக்கிருப்புகள் காகிதாதிகள் மற்றும் நுகர்வுப் பொருட்களைக் கொண்டுள்ளன. சரக்கிருப்புக்கள் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் எது குறைவோ அதில் பெறுமதி மதிப்பிடப்படுகின்றன. தேறிய தேறக்கூடிய பெறுமதியானது வியாபாரத்தின் சாதாரண நிலையில் விற்பனை செய்யப்படக்கூடிய சரக்கிருப்பின் பெறுமதியாகும்.

3.10 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவையும் காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக காசாக மாற்றப்படக்கூடிய அதிக திரவத்தன்மை வாய்ந்த குறுகிய கால முதலீடுகள் மற்றும் கையிலுள்ள காசு என்பனவற்றினை வரையறுக்கின்றதுடன் காசும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கி மேலதிகப்பற்றுக்களின் தேறிய நிலுவை, குறுகிய கால கடன்கள் மற்றும் குறுகிய கால முதலீடுகளையும் உள்ளடக்குகின்றது.

3.11. காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்

காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இல 09 காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுக்கமைவாக மறைமுக முறையினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

## 4. ஊழியர் நன்மைகள்

அ) வரையறுத்த பயன் திட்டம் - இழைப்பாறல் பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இல – பணிக்கொடை கொடுப்பனவுச் சட்ட கொடுப்பனவின் கீழ் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு இழப்பீட்டினை வழங்கும் ஓர் வரையறுத்த பயன் திட்டமாகும். இப்பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு சேவையின் முதலாண்டிலிருந்து ஆரம்பமாகும் சேவையின் ஒவ்வொரு பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டுக்குமான அனைத்து ஊழியர்களின் நிதியாண்டின் இறுதி மாதத்தின் அரை மாத சம்பளத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொணரப்பட்ட ஏற்பாட்டுக்கும் வருட இறுதியில் முன்கொண்டு செல்லப்பட்ட ஏற்பாட்டுக்குமிடையிலான வித்தியாசத்தின் பெறுபேறாக வருமானக் கூற்றில் கையாளப்படுகின்றது. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் தனித்தனியாக முதலீடு செய்யப்பட்டுள்ளன.

ஆ) பங்களிப்பு திட்டத்தினை வரையறை செய்தல்

ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய ஊழியர்கள் உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைவாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கு தகுதியுடையவர்களாவர்.

## 5. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

பொறுப்புக்களும் ஏற்பாடுகளும் பொருளாதார நன்மைகளைக் கொண்டிருக்கின்ற மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலின் விளைவாக எதிர்பார்க்கப்படுகின்ற தீர்ப்பனவுகளின் கடந்தகால நிகழ்வுகளின் பெறுபேறாக தற்போதிருக்கின்ற கடப்பாடானது சட்ட ஆக்கபூர்வமாக இருக்கின்றபோது ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஐந்தொகை திகதியின் ஒரு வருட காலத்தினுள் அல்லது கடன் கொடுத்தோரின் கேள்வியில் செலுத்தத்தக்க கடப்பாடுகள் ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புக்களாக காட்டப்படுகின்றன. ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தத்தக்க பொறுப்புக்கள் ஐந்தொகையில் நடைமுறையல்லா பொறுப்புக்களாகக் காட்டப்படுகின்றன.

அ) வர்த்தகமும் ஏனைய செலுத்தத்தக்கவைகளும்

வர்த்தகமும் ஏனைய செலுத்த தக்கவைகளும் அவற்றின் கிரயத்தில் கூறப்படுகின்றன.

ஆ) நாணயமாற்று வீத சமநிலைப்படுத்தும் ஒதுக்கம்

வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கப்பலில் ஏற்ற முன்னரான அல்லது பின்னரான உத்தரவாதங்கள் தொடர்பில் வெளிநாட்டு நாணயங்களில் பெறப்பட்ட காப்புறுதி கட்டணமானது சேமிப்புகள்.'.முதலீடுகள் கொண்டிருக்கின்ற வட்டியில் வைப்பிலிடப்பட்டுள்ளன. நாணயமாற்று வீதங்கள் நாளாந்த அடிப்படையில் தளம்பலடைகின்றன. சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகளின் பெறுமதிகளும் காலத்திற்கு காலம் மாற்றமடைகின்றன. இத்தகைய முதலீடுகள் வெளிநாட்டு நாணயங்களில் செலுத்தத்தக்க ஏதேனும் கோரிக்கை கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. வருமானக்கூற்றில் அறவிடப்படுகின்ற பெறுமதியில் தளம்பல்களினால் எழுகின்ற இலாபங்கள் அல்லது நட்டங்களாயின், பெறுபேறானது நிதிப் பெறுபேறுகளினை தவறானதாக்கலாம். இதனால், நாணயங்களின் பெறுமதியில் ஏற்படும் தளம்பலானது ஒதுக்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முதலீடுகளின் பெறுமதியில் ஏற்படும் ஏதேனும் எதிர்கால மாற்றங்கள் இத்தகைய ஒதுக்கத்திற்கெதிராக அறவீடு செய்யப்படும்.

இ) கோரிக்கைகளுக்கான எதிர்பாராத ஒதுக்கீடு

பயண உத்தரவாதங்களின் செலவுக்கான கோரிக்கைகளினை செலுத்த வீதாசாரம் தொடர்பிலான எமது கடந்தகால அனுபவங்கள் பெறப்பட்ட காப்புறுதி கட்டணங்களின் 30மூ இல் அமைந்திருந்தன. 15மூவிகிதாசாரத்தின் மீது மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு பெறப்பட்ட காப்புறுதி கட்டணமானது காப்புறுதி கட்டணம் பெறப்பட்ட திகதியிலிருந்து 3 வருடகாலப்பகுதிக்கு மேற்பட்ட கோரிக்கைக்கான பொறுப்பினைக் கொண்டிருக்கும். கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் பயண கடன் காப்புறுதி உத்தரவாதங்களின் செலவுக்காக முறையே 15மூ, 10மூ மற்றும் 5மூ விகிதாசாரத்தின் மீது மூன்று வருட காலப்பகுதிக்கு மேல் பெறப்பட்ட காப்புறுதி கட்டணத்தின் 30 சதவீதம் வரையில் எதிர்பாராத கோரிக்கைகளுக்கான ஏற்பாடாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆண்டின் இறுதியிலுள்ளவாறு பிரதிபலிக்கும் வகையில் மீதிகளுக்கிடையிலான இடைவெளியினைப் பேணும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இந்த ஏற்பாடானது சீராக்கப்படலாம்.

ஏனைய உற்பத்திகளுக்கான ஏற்பாடுகள் பின்வரும் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விற்பனையாளர் இடர் காப்புறுதி பூட்கை
15மூ
ஏரிஏ கார்ணற் முறைமை மீதான நேரடி உத்தரவாதம் 2மூ
கப்பலில் ஏற்ற முன்னரான கடன் உத்தரவாதங்கள்
12மூ
கப்பலில் ஏற்றிய பின்னரான கடன் உத்தரவாதங்கள் 5மூ

ஈ) கூறப்பட்ட கோரிக்கைகளுக்கான ஒதுக்கீடு

இந்த ஏற்பாடு ஏற்படுத்தப்படும் போது தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு கணக்குக்கு சேர்க்கப்படுகின்றன. கோரிக்கைகளுக்கான விசேட ஏற்பாடொன்று நியாயமானதாக கருதப்படுமிடத்து ஐந்தொகை திகதியிலுள்ளவாறான தற்போதைய சூழ்நிலைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோரிக்கையானது மேற்கொள்ளப்பட வேண்டிய சாத்தியப்பாடுகளுக்கான விடயங்களுக்குரிய சாட்சியங்களும் உறுதியுரைகளும் கிடைக்கக் கூடியதாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து கோரிக்கை கொடுப்பனவானது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுக்கெதிராக பதிவளிக்கப்படும். மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டின் தொடர்ச்சியானது கோரிக்கைகளுக்கான பொறுப்பின் சாத்தியப்பாட்டின் அடிப்படையிலானதாக அமையும்.

உ) தொழில்நுட்ப மாற்றீட்டு ஒதுக்கம்

இது, தொழில்நுட்ப சூழ்நிலையில் இடம்பெறுகின்ற வேகமான மாற்றங்கள் மற்றும் அபிவிருத்திகளுக்கு முகங்கொடுக்கும் நோக்குடன் எதிர்கால தொழில்நுட்ப மாற்றீடுகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடொன்றினை இனங்கண்டு அங்கீகரித்துள்ளது. அதற்கிணங்க, தொழில்நுட்ப மாற்றீடு ஒதுக்கமாக மொத்தக் காப்புறுதி கட்டண வருமானத்தின் 1.25மூ இனை வழங்குவதன் மூலம் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மாற்றீட்டுக்கான தேவை எழுகின்ற போதெல்லாம் தேவையான தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு குறித்த ஒதுக்கமானது பயன்படுத்தப்படும். இந்நோக்கத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் இனங்காணப்பட முடியும் என்பதுடன் ஏதேனும் எதிர்கால கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தனித்தனியாகவும் முதலீடு செய்யப்பட முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 6 வருமானம்

6.1 காப்புறுதி கட்டண வருமானம்

காப்புறுதி கட்டண வருமானத்திலிருந்து பெறப்படும் வருமானமானது சேர்ந்த அடிப்படையில் கணக்குக்கு சேர்க்கப்பட வேண்டிய காப்புறுதி கட்டண வருமானத்தினை அனுமதிக்காத வியாபாரத்தின் தன்மையினால் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. இடர் மற்றும் பரிசளிப்பின் மாற்றலானது ஒப்பந்தத்தின் தனிப்பட்ட நியதிகளுக்கமைவாக வேறுபடும் அனைத்து செலவின விடயங்களும் சேர்ந்த அடிப்படையில் கணக்குகளிற்கு சேர்க்கப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுகளில் பிரயோகிக்கப்பட்டவாறு நிலையானவையாகவுள்ளன.

6.2 ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான இலாபம் மற்றும் நட்டம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டு முடிவின்போது அல்லது விற்பனையின் மீதான ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் விற்பனை நடைபெறுகின்ற காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் ஏனைய தொழிற்பாட்டு வருமானமாக வகைப்படுத்தப்படுகின்றது.

6.3 செலவின அங்கீகாரம்

அ) வருமான செலவினம்

வருமான கூற்றில் காட்டப்பட்டவாறு கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட இலாபமானது ஆதனம் பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் தேய்மானத்திற்கான அனைத்துப் பொறுப்புக்களையும் அளித்ததன் பின்னருள்ளதாகும். வருமானக் கூற்றினை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக பணிப்பாளர்கள் தொழில் முயற்சியின் செயலாற்றுகையின் தற்போதைய நியாயமான முறையினை வெளிப்படுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டிலுள்ளனர். ஆகையால், இந்த சமர்ப்பித்தல் முறையானது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆ) மூலதன செலவினம்

வியாபாரத்தின் சம்பாதிக்கும் ஆற்றலினை அதிகரிக்கும் நோக்குடன் அல்லது வியாபாரத்தினை கொண்டு நடத்தும் நோக்குடன் சொத்தின் நிலையான தன்மையினை மேம்படுத்துவதில் அல்லது விரிவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளும் செலவு மூலதன செலவாகக் கருதப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் கணக்குக்கு சேர்க்கப்படும்.

6.4 வரிவிதிப்பு
வருமான வரி செலவுகள்

குறித்த ஆண்டுக்கான வருமானவரி செலவுகள் நடைமுறை மற்றும் பிற்போட்ட வரிகளைக் கொண்டிருக்கின்றது. வருமான வரியானது உரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்படுகின்ற விடயங்களுடன் தொடர்புடையவற்றின் விரிவாக்குதல் தவிர்ந்த வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

6.5 இரவல் வாங்கும் செலவுகள்

இரவல் வாங்கிய செலவுகள் குறித்த ஆண்டில் இடம்பெற்ற செலவாகவே கருதப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.

6.6 ஒப்பீட்டு தகவல்

ஒப்பீட்டு ரீதியான தகவலானது நடைமுறையாண்டின் சமர்ப்பித்தலினை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படுவதால் மீளவும் வகைப்படுத்தப்பட்டது.

6.7 இணக்கப்பாடுகளும் எதிர்பாராதவைகளும்

கடந்த கால நிகழ்வொன்றிலிருந்து எழுகின்ற சொத்துக்கள் அல்லது கடப்பாடுகள் மீதான எதிர்பாராத நிகழ்வுகள் சாத்தியமானவையாக இருப்பதுடன், கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கப்பால் நிகழுகின்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் நிகழும் தன்மை அல்லது நிகழாத தன்மை மீது மாத்திரம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

6.8 ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்
ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிகழும் அனைத்து நிகழ்வுகளும் பொருத்தமானதாக இருக்குமிடத்து வெளிப்படுத்தப்பட்டு சீராக்கப்பட்டதாகக் கருதப்பட்டுள்ள

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

எவ்ஆர்(2)/எச்/எஸ்எல்ஈசீஐசீ/1/14/2 — 2015 நவம்பர் 23

මගේ අංකය / எனது இல. / My No. — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date

தலைவர்,

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

**இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படி விரிவான அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் நிலவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை (எல்கேஏஎஸ்)

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) எல்கேஏஎஸ் 16- **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்.** சொத்துக்கள் அதனை பயன்படுத்துவதற்காக தொடங்கும் போது பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2014 திசெம்பர் மாதத்தின் போது கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் பதிவுசெய்யப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 38,612 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) **எல்கேஏஎஸ் 37- ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்-** கடந்த நிகழ்வின் விளைவாக கடமைகளை தற்போது முழுவதும் வைத்திருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டியதுடன் பொருளாதார நன்மைகளை தீர்மானிக்கின்ற வளங்களின் வெளியேற்றம் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு வேண்டுமென சாத்தியமாகவுள்ளது. இருந்த போதிலும் அந்த நிபந்தனைகளை பூர்த்தியாக்காமல் ரூபா 6,644,192 ஆன ஏற்பாடு தொழில்நுட்ப மீளமைப்பு ஒதுக்கமாக கூட்டுத்தாபனத்தால் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் இருக்க வேண்டியதுடன் நாட்டின் வெளிப்பகுதி ஏற்றுமதியாளர்களிற்கு வசதியளிப்பதற்கு உரிய அமைச்சின் முன்னங்கீகாரத்துடன் கிளைகள் தாபிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும், கூட்டுத்தாபனம் கடந்த 27 ஆண்டுகளின் போது நாட்டின் வெளிப்பகுதியில் எவ்வித கிளைகளையும் தாபித்திருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சிகளாலும் நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக வருடாந்த வரைபு பாதீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனமானது 2014 சனவரி 22 இலேயே சொல்லப்பட்ட பாதீட்டை தயாரித்திருந்தது. |
| (இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை ஏற்பாட்டிற்கான அதிகாரச் சட்டத்தின் 3.1 (அ) பிரிவு | 5 ஆண்டு சேவைக்காலத்தை பூர்த்திசெய்திருந்த ஊழியர்களிற்காக ஊழியரின் பதின்நான்கு நாட் கூலி அல்லது சம்பளம் பணிக்கொடையாக வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் அந்த வேண்டுகைக்கு முரணாக மிகையாக 13 ஊழியர்களிற்கு ரூபா 113,020 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அமைச்சரவை, பொது நிரிவாக அமைச்சு அல்லது பொது திறைசேரி என்பவற்றால் மாத்திரம் அனுமதிக்கப்பட்ட படிகள் கூட்டுத்தாபனத்தால் அதன் உத்தியோகத்தர்களிற்கு செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 760,000 மற்றும் ரூபா 764,780 தொகையான முறையே பண்டிகை படிகள் மற்றும் பரிசுச்சீட்டுக்கள் போன்றன பணிப்பாளர் சபையின் அனுமதியில் செலுத்தப்பட்டது. |
| (உ) | 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் 5.2.2 ஆம் பிரிவு | மோட்டார் வாகனங்களின் கொள்வனவிற்காக செலவு செய்வதற்கு முன்னர் உரிய அமைச்சின் அனுமதி மற்றும் பொதுத் திறைசேரி, பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒத்துழைப்பு, என்பன பெறப்பட்டிருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டிற்கு முரணாக கூட்டுத்தாபனம் பணிப்பாளர் சபையின் அனுமதியை பெற்ற பின்னர் ரூபா 8,808,552 பெறுமதியான 2 வாகனங்களை கொள்வனவு செய்யப்பட்டது. |
| (ஊ) | 2000 சனவரி 31 ஆந்திகதிய பிஎவ்/பிஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பிரிவு | உரிய ஊழியர்களால் உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்த வேண்டிய போதிலும் இந்த வேண்டுகைக்கு முரணாக கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 640,017 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளானது முன்னைய ஆண்டிற்கான ரூபா 206,499,156 ஆன நேரொத்த வரிக்கு முந்திய தேறிய மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 190,480,849 ஆன வரிக்கு முந்திய தேறிய மிகையில் விளைந்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 16,018,307 ஆன வீழ்ச்சியை காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 32,457,955 அல்லது 24 சதவீதவீதத்தால் ஏனைய திரண்ட வருமானத்தின் குறைவு இந்த வீழ்ச்சிக்காக பிரதான காரணமாக இருந்தது.

**3.2 கூட்டுத்தாபனத்திற்கு எதரிாக கூட்டுத்தாபனத்தால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய காப்புறுதி இழப்பீட்டு செலுத்தாமைக்கான ரூபா 17,020,611 தொகையான இழப்பீட்டு கோரிகை கூட்டுத்தானத்திற்கு எதிராக வர்த்தக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றினை வெளித்தரப்பினர் தொடுத்திருந்தனர்.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்காக ரூபா 27,556,624 தொகையான இழப்பீட்டை கோருகின்ற 04 வெளித்தரப்பு நிறுவனங்களிற்கு எதிராக நான்கு வழக்குகளை கூட்டுத்தாபனம் தொடுத்திருந்தது.

**4. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 9.2 ஆம் அத்தியாயம் மற்றும் நிதிப்பிரமாணம் 133 என்பவற்றின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. பதிலாக தனியார் கணக்காய்வு நிறுவனமொன்று கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது உள்ளக கணக்காய்வக் கட்டணமாக ரூபா 239,904 ஆன தொகையை செலுத்தியிருந்தது.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களிற்கு இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

**4.3 தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்**

2010 ஆம் ஆண்டில் சொத்துக்களின் கொள்வனவிற்கான இழப்பீடாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 208,973,030 ஆன பெறவேண்டிய வருமானம் மற்றும் 2003 ஆம் ஆண்டிற்காக திறைசேரி வைப்புக்களிலிருந்து பெறவேண்டிய ரூபா 67,154,144 தொகையான வட்டி மீளாய்வாண்டு இறுதிவரையும் சேகரிக்கவோ அல்லது ஏதாவது முறையான நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 ஆண்டறிக்கையை சமர்ப்பத்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் சகல மூன்று மொழிகளிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டு இறுதிவரையும் 2013 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

நிறைவேற்று மட்டத்தில் 15 வெற்றிடங்களும் நிறைவேற்று அல்லாத மட்டத்தில் 05 வெற்றிடங்களும் நிலவிய போதிலும் 2014 திசெம்பர் 31 வரையும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*M*